# திராவிட நாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 17—10—48 | இதழ் 18


## குற்றம் சாட்டுகிறார்.

—✲—

"சர்க்காரும் முதலாளிகளும் தொழிலாளருக்கு நியாயமாகச் செய்யவேண்டியதைச் செய்யவில்லை. சர்க்காருடன் தொழிலாளர் ஒத்துழைக்கவில்லை என்று கூறுவது சரியல்ல. தொழிலாளர்கள் மோசமாக கைநழுவ விடப்பட்டார்கள் என்றே நான் சொல்லுவேன்."

ஜெயப்பிரகாஷ்
பம்பாய் அக், 8.

# ★ இரு காட்சிகள்! ★

மலர்வனம். மனோரம்மியமான மாளிகை. விதவிதமான மின்சார விளக்குகள் பகலெனப்பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. பாதுகாப்புப் படையினர் காவல் புரிகின்றனர்.

மன்னர் கொலுவீற்றிருக்கின்றார். மந்திரி பிரதானியர்கள், மன்னரின் நிலைகண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கிக் கிடக்கின்றனர். மங்கையர் நாட்டியம் ஓர்புறம். வீணையின் நாதம் வேறு கேட்கிறது. கர்னாடக கானம், கேட்போர் மனதைக் கொள்ளை கொள்ளுகிறது.

மன்னரை வாழ்த்தி வணங்குகிறார்கள். துதித்துத் தோத்திரம் செய்கிறார்கள். வரிசை வழங்குகிறார்கள். காணிக்கை செலுத்துகிறார்கள். மன்னரின் முகம் மலர்ந்து கிடக்கிறது. அதனைக்கண்ட மற்றவர்கண்களிலும் சந்தோஷம் தாண்டவம் ஆடுகிறது.

சரிகைத் தலைப்பாகை — விலையுயர்ந்த மேனாட்டுமுறையில் ஆடை அலங்காரங்கள்—விரல்களிலே விளக்கேற்றியது போன்ற வெளிச்சந் தரும் வைரமோதிரங்கள். வகைவகையான கார்களில் விழாவிற்கு வருகிறவர்கள் வந்தவண்ணம் இருக்கின்றனர்.

விருந்து — வாணவேடிக்கை — விளக்குஜோடனை—அவரவர்கள் அந்தஸ்துக்கான முறையில் வரவேற்பு உபசாரம்—வாழ்த்துச் செய்திகள்—இவ்வளவும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

சாமுண்டீஸ்வரிக்குச் சம்பூரண சாத்துப்படி, மன்னரின் விசேஷ பூஜை. புரோகிதர்களுக்குத் தருமம் தானம், நல்லமுறையிலே நடத்தி வைத்தார் மன்னர். சாமுண்டியின் சக்திகண்டு மன்னர் சொக்கிப் போனார்—பார்த்த மக்களும்பரவசம் கொண்டனர்.

இதுபோன்று மைசூரில் தசரா பண்டிகையின்போது, மைசூர் மன்னரும் மற்றவர்களும் கேளிக்கையில் மூழ்கி இருந்திருப்பர். வறுமையின வாட்டம், பசிபிணியின பயம் மாளிகையிலேகூடி இருந்தவர்களுக்குத் தெரிந்திருக்காது. வரண்டதலையர்கள்—வளைந்த முதுகினர் — காய்ந்த வயிற்றினர்—சோர்ந்தநடையினர்-உருக்குலைந்த மேனியினர் — உடைந்த உள்ளத்தினர் — ஏழைகள் உள்ளனர் என்பது, கொலுவீற்றிருந்த மன்னருக்கோ, அவருக்குப் பராக்குக்கூறிக்கொண்டு பதவியைப் பற்றிக்கொண்டிருக்கும் மந்திரிமார்களுக்கோ, மன்னரின் திருக்கோலத்தைக்கண்டு களிக்கவந்த மற்றக்கனதனவான்களுக்கோ தெரிந்திருக்காது.

சாமுண்டீஸ்வரிக்கும் மன்னனைக் காப்பதில் இருக்கும் கவலை அளவிற்கு, மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்னும் நினைப்பு இருக்க முடியாதல்லவா? மன்னருக்காகப் பரிந்து பேசி, மாதாவின் அருளைப் பெற்றுத் தரும் பூசாரிகள், பொது மக்களுக்காக வாதாடும் பணியை எவ்வாறு மேற்கொள்ளப் போகிறார்கள்? அந்தப் பொறுப்பு மன்னருக்கேயன்றி, மாதாவுக்குமில்லை—பூஜாரிக்குமில்லை! மக்கள் வழி மன்னராக இருந்தால்!

* * *

திப்பையா குடும்பத் தலைவன். அவன், சாம்ராஜ்பேட்டை லட்சுமி அக்ரகாரத்தில் குடியிருந்து வந்தான். வயது முப்பத்தைந்து. சுகாதார இலாக்காவில் அவன் ஒரு பியூன்.

அவன் மனைவியின் பெயர் லிங்கம்மா. ஒருவர் வீட்டிலே, பாத்திரம் துலக்குவது, புடவைகளைத் தோய்ப்பது, வீடு சுத்தம் செய்வது, அவளுக்கிருந்த வேலை.

முதல்பெண்ணுக்கு வயது பத்து; பெயர் லிங்கம்மா. தேவம்மா, பதினொறு திங்களும் நிரம்பப் பெறாத சிறு குழந்தை.

கணவனும் மனைவியும் கிடைத்த வேலையைச் செய்து வந்தும்கூட, குடும்ப பாரத்தைத் தாங்கமுடியவில்லை திப்பையாவால். வருகிற வருமானம், காலங் கழிப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை.

இந்நிலையில் உயிரோடு இருப்பது, திப்பையாவிற்குப் பிடித்தமாகத் தெரியவில்லை. ஓர்நாள், இரு சிறுமிகளையும் அழைத்துக்கொண்டு, அங்குள்ள குளத்துக்குச் சென்று, குளத்தில் இறங்கிவிட்டான்.

மாலை மூன்று பிணங்கள் குளத்தில் மிதந்தன. போலீஸ் விசாரணை நடத்திற்று. தற்கொலை என்று பஞ்சாயத்தார்கள் தீர்ப்புக்கூறினர்.

தாய் கூறினாள், 'வறுமை தாங்க முடியவில்லை. காக்க வகை கிடைக்கவில்லை. தற்கொலை செய்து கொண்டார் என் கணவர்.' என்று!

'பசிக்கிறது' என்று பத்துவயதுப் பெண் பதறும்பொழுது, பசியெடுத்தும் சிறு குழந்தை மழலை மொழியால் அதனைத் தெரிவிக்கும் பொழுது, அதனைக் கேட்ட திப்பையாவின் நெஞ்சம் என்ன பாடுபட்டிருக்கும்? யாழ் - குழல் ஓசையினும் இன்பமூட்டக் கூடியது கிள்ளையின் மழலைமொழி! ஆம்! திப்பையாவின் நிலையில் உள்ள வறுமையாளர்களுக்கு இது விலக்கு. இன்பந்தரவில்லை; துன்பத்தையே பெருக்கிற்று; வேதனையையே வளர்த்தது.

லிங்கம்மாவிற்கு இனி ஒரே ஒரு வேதனைதான். தான் உயிரோடுஇருப்பதே அது!

* * *

மாளிகையில் மன்னர் கொலுவீற்றிருந்த காட்சியையும், பண் குடிசையில் சிதைந்த வாழ்வுநடத்தும் பலரின் நிலையையும் ஒத்திட்டுப் பார்க்கவேண்டும் மக்கள். முன்னையது கண்கொள்ளாக் காட்சியாகவும், பின்னையது கண்களைக் குளமாக்கும் காட்சியாகவும் இருப்பதை உணரலாம். இந்த இருகாட்சிகள், இங்கு நாட்டில் இருக்கத்தான் வேண்டுமா? என்றென்றும் முடிதாங்கிகள்கொலுவீற்றிருக்கவும்,மக்களில் பெரும்பாலோர் பசிப்பிணிக்குப் பலியாகி, தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் துணிவு பெறும் துன்பநிலை நீடிக்கவும், பார்த்துக்கொண்டு இருப்பதுதான் நல்லவர்கள் கடமையா? பெற்ற சுதந்திரம்-கிடைத்த விடுதலை வீணர்களுக்குத்தான் வாழ்வளிக்கும் சாதனமாக இருக்கவேண்டுமா? திப்பையாக்களின் தற்கொலை முயற்சியைத் தடுக்கும்—நல்வாழ்வு பல

(14-ம் பக்கம் பார்க்க)

# காஷ்மீரில் ★ புதிய போர்?

ஷேக் அப்துல்லா:— "சகிக்க முடியவில்லை அக்ரமத்தை! மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் சதா ஆபத்துத்தான். ஏழ்மையின் கொடுமை சொல்லுந் தரத்ததல்ல, ஒரு நூறு குடும்பத்தாரிடம் நிலம் சிக்கிக் கொண்டது. அந்தப் பண்ணைகளிலே பாடுபடும் இலட்சக்கணக்கான ஏழைகளின் வாழ்வு இருண்டுகிடக்கிறது. சுகபோகத்தில் மூழ்கிக்கிடக்கும் சீமான்கள், அவர்கள் புடைசூழக் கொலுவீற்றுக்கொண்டு, மக்களை மதியாது, அவர்களின் நலனைப்பற்றித் துளியும் அக்கறை காட்டாது, செருக்குடன் உளள, மகாராஜா! இதுதானே இன்றைய காஷ்மீர்! நேருஜி! தாங்கள் பிறந்த திருநாட்டிலே இப்படிப்பட்ட கொடுமை இருக்கலாமா? இப்படி மதோன்மத்தராக உள்ள ஒருவர் மகாராஜாவாக இருப்பதை மக்கள் எப்படிச் சகிப்பார்கள்?"

நேரு:- "யார் சகிக்கச்சொன்னார்கள்? மக்களாட்சியின் மாண்பை அறிந்த யார் அப்படிச்சொல்ல முடியும்? அப்துல்லா! அந்த அக்ரம ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்யத்தான் வேண்டும். மகாராஜாக்களின் காலமல்ல இது; பாமர மக்கள் பாராளும்காலம். மக்களுக்காக மகாராஜாவேயொழிய, மகாராஜாக்களுக்காக மக்களல்ல! கொடுங்கோல் மன்னன் வாழ்கிற நாட்டைவிடக் கடும்புலி வாழும் காடுமேல், என்ற கோட்பாடு, நமது மூதாதையர் நாட்களிலே. இப்போது கொடுங்கோலை மக்கள் முறிக்கவேண்டும் என்பதுதான் திட்டம், ஆகவே அருமை நண்பனே! அஞ்சா நெஞ்சுடைய அப்துல்லாவே! ஏழ்மையால் தாக்கப்பட்டுக், கொடுங்கோன்மையால் கொட்டப்பட்டு, புழுப் போலத் துடிக்கும் ஏழைமக்களுக்கு, உரிமை உணர்ச்சியை ஊட்டு, ஆவேசம் வரச்செய், ஆண்மையின் அருமையை எடுத்துக்கூறு; பார் பிறகு, புழு புலியாகும்! மகாராஜாவைக் கண்டு மருளும் மக்களின் கண்களிலிருந்து கிளம்பும் கோபக்கனல், காஷ்மீரத்திலே தியாகத்தீயை மூட்டட்டும், அடிமைவாழ்வு பொசுக்கப்படட்டும்."

அ:- "அருமை, அருமை, பண்டிட்ஜி! காஷ்மீர மக்கள் ஏழைகள்தான், ஆனால் ஏதுமறியாதவர்களல்ல, எதையும் இழக்கச் சித்தமாக இருக்கிறார்கள், சுதந்திரத்தைப் பெற."

நே:- "அப்துல்லா! அவ்விதமானால், ஆரம்பி போராட்டத்தை."

அ:- "செய்யலாம், ஆனால்......."

நே:- "ஏன் தயக்கம் அப்துல்லா? மன்னனின் படை பலத்தைக் கண்டு பயமா?"

அ:- "உயிர் எமக்கு வெல்லமல்ல, பண்டிட்ஜி! உரிமையும், கடையில் வாங்கக் கூடிய பண்டமல்ல."

நே:- "உனக்கா தெரியாது! உள்ள உரம் படைத்தவனே! உரிமைப் போரைத் துவக்கு."

அ:- "துவக்கத் தயக்கமில்லை. மக்களும் துடிக்கிறார்கள், தூர்த்தனின் துரைத்தனத்தை ஒழிக்க, ஆனால்......."

நே:- "மீண்டும் ஆனால்....என்ன அப்துல்லா, என்ன விஷயம்? சொல்!"

அ:- "மகாராஜா ஒரு இந்து—மக்கள் முஸ்லீம். ஆகையால்......."

நே:- "பைத்யக்காரனே! இருக்கட்டுமே! இந்துவானால் என்ன!"

அ:- "ஒரு இந்து அரசனை ஒழிக்க முஸ்லீம்கள் சதி செய்கிறார்கள் என்று, என் முயற்சியைக் கெடுக்கக் கூறக்கூடும்."

நே:- "யார் கூறுவர்? தூய உள்ளம் படைத்த எவரும் கூறார். எவர் அதுபற்றிக் கூறினாலும், நான் செவிகொடேன். காஷ்மீரப் பிரச்னை, இந்து—முஸ்லீம் என்பதல்ல, கொடுங்கோல் புரியும் ஒரு மன்னனுக்கு எதிராக உரிமைப் போர் நடத்துகிறார்கள் மக்கள்."

அ:- "ஆம்! இந்த எண்ணம், நிலைத்தால் போதும்."

நே:- "இதிலே ஒரு மாற்றமும் இராது—பயம் வேண்டாம். உரிமைப் போரைத் தொடுப்பதற்குத் தயங்காதே, விஷமிகளும் வகுப்புவாதிகளும், ஏது வேண்டுமானாலும் பேசட்டும், கவலை வேண்டாம்—செல்லாக்காசு ஆக்குவேன் அவர்தம் பேச்சை. அப்துல்லா! மக்களின் உரிமை நிலை நாட்டப்படவேண்டும். மகாராஜாவின் கொட்டம் ஒடுக்கப்பட வேண்டும்."

அ:- "சபாஷ்! நேருஜி! மகிழ்ந்தேன்! மகாராஜா ஒழிக!

நே:- "ஒழிக காட்டாட்சி! ஓங்குக ஜனநாயகம்! போய்வா அப்துல்லா! போரிடு, போரிடு! வெற்றி பெறு! எப்போதும் எமது உதவி உண்டு—உறுதியாக இதை நம்பு உத்தமனே! விரட்டு, மக்களைக் கெடுக்கும் மகாராஜாவை"

* * *

காஷ்மீரத் தலைவன், ஷேக் அப்துல்லாவுக்கும், பண்டித நேருவுக்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற உரையாடல் நடைபெற்றது. ஷேக்அப்துல்லா, உற்சாகமாக உரிமைப் போர் துவக்கினார்—மக்கள் அவர் பக்கம் திரண்டு நின்றனர்—மன்னன் தன் படைவரிசையை ஏவினான்—சிறைக் கூடம் நிரம்பிற்று—சித்திரவதைகள் சர்வ சாதாரணச் சம்பவங்களாய்விட்டன — சொத்து பறிமுதல்—நாடு கடத்தல்—வீடு புகுந்து அடித்தல் போன்ற கொடுமைகள் பலப்பல நடந்தன, வீரம்

குன்றவில்லை; தியாகம் ஓங்கிற்று! ஷேக் அப்துல்லாவின் புகழ்பரவிற்று! மகாராஜா நடத்திய மனித வேட்டைக்கு முக்கியமான துணைவராக இருந்தவர், அந்த நாட்களில் திவானாக இருந்த சர். N. கோபாலசாமி ஐயங்கார்—இன்று நேரு சாக்காரிலே ஒரு மந்திரியாக இருக்கிறாரே, அதே ஐயங்கார்ஸ்வாமிகளேதான், அடக்கு முறையினால் அப்துல்லாவின் வீரப் படையை அழித்துவிட முயன்றார்.

* * *

அப்துல்லா அஞ்சியதுபோலவே, பழி சுமத்தும் படலமும் ஆரம்பமாயிற்று. இந்து மன்னரை ஒழிக்க முஸ்லீம் சதி, இது உண்மை உரிமைப் போரல்ல, வகுப்பு வெறிச் செயல், என்று விஷமப் பிரசாரம் நடைபெற்றது. அடக்கு முறையும், விஷமப் பிரசாரமும், வீரத் தலைவனை எதும் செய்யமுடியவில்லை, கொடுமை வளர வளர, அப்துல்லா, தணலிற் போட்ட தங்கமானார். உரிமைப் போர் பலமாக நடைபெற்றது—நேருவும் அவருடைய நண்பர்களும், ஷேக் அப்துல்லா பக்கம் நின்றனர்.

* * *

பதினேழாண்டுகள் இந்தப் போர் நடந்து வந்தது. காஷ்மீரம், மிகப் பெரும்பாலான முஸ்லீம்கள் வாழும் நாடு—மன்னர் இந்து—சுபாவமோ, காட்டுக் காலத்தது; மக்கள் அனைவரும், ஜனநாயக ஆட்சி முறையைப் பெற்றே தீருவதென்று பணிபுரிந்து வந்தனர். இதற்கிடையில், ஏகாதிபத்யம் கடையைக் கட்டிக்கொண்டது; இந்தியா விடுதலை பெற்றது, நேருசர்க்காரும் ஏற்பட்டது. அப்துல்லாவின் அகமகிழ்ச்சிக்கு அளவிருக்க முடியாதல்லவா! பதினேழாண்டுகளாக, பல்வேறு தொல்லைகளைச் சகித்துக் கொண்டு, மன்னரை எதிர்த்து நடத்திக் கொண்டு வரும் உரிமைப் போருக்கு, இனி, உருவான உடனடியான உதவி கிடைக்கும்—மன்னன் மருண்டு ஓடுவான்—மக்களாட்சி மலரும்—புதுமணம் வீசும்—காஷ்மீரம் களிக்கும், என்றெல்லாம் அப்துல்லா எண்ணினார். மகாராஜாவின் நிலைமை, மிக ஆபத்தனதாகி விட்டது. அதுபோது மேலும் ஒரு உறுதியான உடனடி முயற்சி செய்யப்பட்டிருந்தால், மகாராஜா மருண்டோடி விட்டிருப்பார். ஆனால்........

* * *

பாகிஸ்தான் காஷ்மீரத்தைக் கைவசப்படுத்தத் திட்டமிட்டுக் கொந்தளிப்பை உண்டாக்கிற்று—மலை ஜாதியினர், காஷ்மீரத்தின் மீது பாய்ந்தனர்—களமாகிவிட்டது காஷ்மீர். இந்தியசர்க்காரின் படைகள் விரைந்தன, இதனைத் தடுக்க—போர் நடந்து வருகிறது.

* * *

கொந்தளிப்பு ஏற்பட்டதும் மகாராஜா காவடி தூக்கினார் டில்லிக்கு—சிறையிலிருந்த அப்துல்லாவையும் அவர் நண்பர்களையும், வேண்டினார், விசித்திரமான கூட்டுறவு ஏற்பட்டது, கொடுமை புரிந்து வந்த மகாராஜாவும், அவருடைய கொடுமைக்காளான அப்துல்லாவும், டில்லி தர்பாரின் யோசனையின்படி, கூட்டுறவாளர்களாயினர்—இந்தியப் படையின் உதவி, சரிந்து கொண்டிருந்த சமஸ்தானத்துக்குக் கிடைத்தது. பாகிஸ்தானின் எண்ணத்தைக் குலைக்க, இந்த முயற்சி தேவைப்பட்டது—காஷ்மீரம் பாகிஸ்தானிடம் சிக்காதிருக்கச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டது—ஆனால் இதே நடவடிக்கை மக்களின் வெறுப்பைக் கிளப்பிய, கொடுங்கோலனுக்கு நல்லதாகி விட்டது; காஷ்மீரம் காப்பாற்றப்பட வேண்டும்! பாகிஸ்தானின் திட்டம் தகர்க்கப்படவேண்டும்! மலைஜாதியினர் ஓட்டப்படவேண்டும்!—என்ற முழக்கமும் நோக்கமும் முன்னணிக்கு வந்தன-மன்னனின் கொடுங்கோன்மை—மக்களின் வறுமை, அவதி, அப்துல்லாவுக்கு அவர் செய்த கொடுமைகள், ஆகியவைகள் பின்னணிக்குச் சென்றன. சீமான்களின் செருக்கு, மறக்கப்பட்டுவிட்டது—மன்னனின் கோலாகலம் மறைக்கப்பட்டுவிட்டது - மக்களின் மனதில், காஷ்மீரம் காப்பாற்றப்படவேண்டும் என்ற ஒரே எண்ணம் ஏற்பட்டது.

இது மகாராஜாவின் நிலைமையை மேலானதாக்கிவிட்டது. காஷ்மீர மக்களின் கண்ணில் படப் பயப்பட்டுக் கொண்டிருந்த மன்னர், கட்டளைகள் பிறப்பிக்கும் நிலை பெற்றார்! அப்துல்லாவை அழித்தொழிக்க விரும்பியவர், அவரைக் கொண்டு, டில்லி சர்க்காரின் உதவியைப் பெற்றார்! பவனிகள் வரலானார்! டில்லியில் மதிப்புக்கிடைத்தது! பறி போக இருந்த பட்டமும் பதவியும் நிலைத்ததுடன் அதைக்காப்பாற்றுவதற்காகக் காஷ்மீர் மக்களும் இந்திய சர்க்கார் அனுப்பிய படைவீரர்களும் இரத்தம் சிந்துகின்றனர். திடீரெனத் தனக்கு மதிப்பு உயர்ந்ததால், மகாராஜாவின் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்திருப்பதுடன், தன்னைக் கவிழ்க்கக் கடுவேகத்துடன் வந்த புரட்சிப் புயலையே தந்திரமாகத் தனக்கு மகிழ்ச்சி தரும் தென்றலாக்கிக்கொண்டு பெருமை அடைகிறார்.

நாட்டைக் காக்க, இரத்தம் சிந்த வீரர்கள் இருக்கிறார்கள்.

நாட்டைப் பற்றி நல்லமுறையில் பேசி, நானிலத்தின் அன்பைப் பெற்றுத் தர நேரு இருக்கிறார்.

நாட்டிலே நல்லாட்சி நிறுவவேண்டுமெனப் போராடி வந்த அப்துல்லாவின் நேசமும் கிடைத்து விட்டது.

இவ்வளவு மகத்தான இலாபம் பெற்றுவிட்டார் மகாராஜா. ஷேக் அப்துல்லாவிடம் நாட்டு நிர்வாகம் தரப்பட்டிருக்கிறது.

* * *

பதினேழாண்டுகளாக, கொடுங்கோலாட்சியை வீழ்த்தப்போரிட்டு அலுத்துள்ள அப்துல்லாவுக்கு, இப்போது அதே ஆட்சியை நடத்தி வந்த அதிபரைக் காப்பாற்றும் வேலையும், அதேபோது, பாகிஸ்தான் படைகளை விரட்டும் வேலையும் சேர்ந்து வந்தழுத்துகிறது. அவருடைய நோக்கத்தின்படியும், காஷ்மீர் மக்களின் கோரிக்கையின்படியும் காரியம் நடக்கவேண்டுமானால், காஷ்மீரைக் கவ்விக்கொள்ள வரும் மலை ஜாதியினரை விரட்டும் மகத்தான வேலையோடு வேலையாக, பதினேழாண்டுகளாக, மக்களை கொடுமைப் படுத்தி வந்துள்ள மகாராஜாவையும் விரட்டியிருக்கவேண்டும். கொடுமை ஒழிந்தது, கொடுங்கோல் முறிந்தது, என்ற களிப்பு, காஷ்மீர மக்களுக்குப் புத்துணர்ச்சி யூட்டும்; இப்போது அவர்கள் காட்டும் உணர்ச்சியைப்போல ஆயிர மடங்கு அதிகமான உணர்ச்சியை அவர்களால் காட்டமுடியும்.

மலை ஜாதியினர் செய்யும் அட்டூழியத்தைக் கண்டு ஆத்திரம் கொண்ட காஷ்மீரிகள், அத்தகைய கொடிய

(13-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 17—10—48 [ஞாயிறு


## "நம்ம சர்க்கார்"

### 4

"நம்ம சர்க்கார்" ஒன்றல்ல, இரண்டு!—என்று நாம் கூறினது, அமைக்கப்படுவதற்கு முன்பு எப்படி இருக்கும் என்று நாம் ஆவலோடு எண்ணிக் கொண்டிருந்தோமோ அந்தக் கற்பனை சர்க்கார் ஒன்று, இப்போது நடைமுறையிலுள்ள, நாங்கள் ஏதும் செய்யத்தான் முடியவில்லை என்று பேசும் அமைச்சர்களைக் கொண்ட சர்க்கார், மற்றொன்று, என்ற கணக்கின்படி மட்டும் கூறப்பட்டதல்ல. நமது மக்களுக்கு, உண்மையிலேயே இரண்டு சர்க்கார்கள் உள்ளன—ஒன்று மாகாண சர்க்கார்—மற்றது மத்திய சர்க்கார்.

இரு இடங்களிலும் இருப்போர் எமது கட்சியினரே, என்று காங்கிரஸ் நண்பர்கள் இறும்பூதெய்வது பற்றி நமக்குக் கவலையும் இல்லை—நஷ்டமும் இல்லை; ஆனால், இந்த இரு இடங்கள் ஒன்றோடொன்று உராசும்போது, நேரிடும் விளைவுகள் நிச்சயமாக, நம்மை மட்டுமல்ல, நமது காங்கிரஸ் நண்பர்களையும் பாதித்தே தீரும். எனவேதான், இந்த இரு அமைப்புகளுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி அவர்களும் சிந்தித்தாக வேண்டும், என்று கூறுகிறோம். மாடி கலனாகி இருந்தால் நமக்கென்ன, நாம் கீழ்த் தட்டிலேதானே குடி இருக்கிறோம், என்று எந்த வீட்டுக்காரரும் கருதி விட முடியாதல்லவா?

நம்ம சர்க்காரிடம், திட்டம் தெளிவாக இல்லை, அப்படி ஏதேனும் சில அரைகுறைத் திட்டங்கள் இருந்தாலும், அவைகளை நிறைவேற்றுவதற்கான பண வசதியும், பணத்தைப் பெறும் வழிவகை வசதியும் இல்லை, என்பது, இன்று, எதிர்க்கட்சிக்காரரான நாம் கூறும், விஷமத்தனமான பேச்சாகக் காங்கிரஸ் நண்பர்களுக்குத் தோன்றக்கூடும்; ஆனால், பிரச்னையை அவர்கள் ஆராய, ஆராய உண்மையிலே, அவர்களே, அந்தநிலைமையை உணரத்தான் செய்வார்கள்.

திட்டங்கள் தீட்டும்போது, மாகாண சர்க்கார், மத்ய சர்க்காரின் நோக்கம் யாதாயிருக்கும், எந்த அளவுக்கு அங்கிருந்து ஆதரவு கிடைக்கும், என்ற விஷயத்தைக் கவனித்தே செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாகாண சர்க்காரை நம்பியே, ஆதரவை எதிர்பார்த்தே, எங்ஙனம், முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள் உள்ளனவோ, அது போலவே, மத்ய சர்க்காரை எதிர்பார்த்து, மாகாண சர்க்கார் வாழ வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, என்றால், நமது மாகாண சர்க்கார், அடிக்கடி, டில்லி போயாகவேண்டும், காலம் அதிகமாகிறது, ஆகவே, ஒரு விமானம் வேண்டும், என்று கூற வேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது. 'அனுமானின்' துணைகொண்டுதான், மாகாண சர்க்கார், அவ்வப்போது காரியமாற்ற வேண்டி வருகிறது. அரிசிமாநாடு—அரக்குமாநாடு—கண்ட்ரோல் புகுத்தும் மாநாடு—அதை ஒழிக்கும் மாநாடு—உரம் தயாரிக்கும் மாநாடு—உள்நாட்டுப் பாதுகாப்பு முறை வகுக்கும் மாநாடு—என்று அடிக்கடி, டில்லியில் நடைபெறும் ஒவ்வொரு மாநாடும், மாகாணசர்க்கார், தனது யோசனையின்படியும், மாகாணத்தின் நிலைமையை உத்தேசித்தும், திட்டம் தீட்டிவிட முடியாது, மத்யசர்க்காரின் மனதை அறிந்த பிறகே, எந்தத் திட்டமும் தீட்டியாக வேண்டும், என்ற உண்மையைத் தெளிவாக்கும் நிகழ்ச்சிகளாகும். இரு அமைப்புகளிலும், இன்று ஒரே கட்சியினருக்கு ஆதிக்கம் இருந்தும்கூட, தொடர்பு, திருப்தி தருவதாகவோ மாகாணங்களின் மனதை மகிழ வைப்பதாகவோ இருக்கிறதென்று, யாரும் கூற முடியாது.

மத்ய சர்க்காருக்குள்ள மனப்போக்குக்கும் மாகாண சர்க்காருக்குள்ள மனப்பான்மைக்கும், சகல விதமான பொருத்தமும் அமைந்திருக்கிறதென்று எந்த அரசியல் ஜோதிடனும் கூறிவிட முடியாது. இடத்துக்கேற்ற இயல்பும், இயல்புக்கேற்றபடி எண்ணமும் எழுவதுதான் இயற்கை. இந்த முறைப்படி, ஒவ்வொரு மாகாணத்திலும், அந்த இடத்திலுக்கேற்றபடியான திட்டம் தீட்டப்பட்டாக வேண்டும்—ஆனால் அப்படிச் செய்வதற்கில்லாத முறையில், மத்யசர்க்கார், ஒன்று இருக்கிறது, எந்தத் திட்டமும், அதனிடம் முத்திரை பெற்றாக வேண்டும். மாகாண சர்க்காருக்கு 'தேவையற்றது, தீங்குபயப்பது' என்று தோன்றும் திட்டங்களைக் கூட, மத்ய சர்க்கார், தனக்குள்ள அதிகார பலத்தைக் கொண்டு புகுத்தமுடியும். யோசனை கூறுவதன் மூலம்—எச்சரிப்பதன் மூலம்—உமது இஷ்டம் என்று வெறுத்துப் பேசுவதன் மூலம்—இப்படிப் பல வழிகளில், மத்ய சர்க்கார், மாகாண சர்க்காரின் போக்கையும் நோக்கத்தையும், கட்டுப் படுத்திவிட முடிகிறது. இது, நாம் வேண்டுமென்றே கூறுவது என்று எண்ணிக் கொண்டு காங்கிரஸ் நண்பர்கள் விஷய விளக்கம் பெறும் சிறந்த பண்பை இழந்துவிடக் கூடாது.

"நமது மாகாணத்துக்கு உணவுப் பொருள் 4 இலட்சம் டன் தேவைப்படுகிறது. மத்யசர்க்காரால் 84000 டன் மட்டுமே தர முடிந்தது. மத்ய சர்க்கார் மறுபடியும் கன்ட்ரோலைப் புகுத்த வேண்டுமென்று தீர்மானித்தது, சென்னை சர்க்கார், அதே முறையைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. கன்ட்ரோல்கள் ஏற்படுத்துவதால், இலஞ்ச இலாவணமும், கள்ளமார்க்கட்டும் ஏற்படுகின்றன என்பது என் அபிப்பிராயம்."

இவ்வண்ணம் பேசுபவர், 'அனுமான்' வாங்கிய, நமது அருமை முதலமைச்சரேதான்; அவருக்கு இஷ்டமில்லாத ஒருதிட்டம்—அதனை மத்ய சர்க்கார் வற்புறுத்துகிறது—மத்ய சர்க்காரின் முகத்துக்கஞ்சி, அவர், அந்தத் திட்டத்தை இங்கு புகுத்துகிறார்—இதுதான், இரு அமைப்புகளுக்குமிடையே உள்ள தொடர்பு! இதை மாகாண சுயாட்சி என்று யார் கூற முடியும்? இப்படியே, மாகாண சர்க்காருக்குப் பிடிக்காத திட்டங்கள், மத்திய சர்க்காரின் வற்புறுத்தலுக்காக வேண்டி இங்கு புகுத்தப்பட்டு வருவதென்றால், மாகாணத்தின் நலன் பாதிக்கப்படாமலிருக்குமா! இப்போதுள்ள நிலைமையில், எப்படியோ ஒன்று, கசப்பாக இருப்பினும், டில்லி டானிக் சாப்பிடுவது தான் சரி, என்று ஓமந்தூரார் வாய் திறக்கிறார்—அவருக்கே அடியோடு பிடிக்காத திட்டத்தை, மத்ய சர்க்கார் வற்புறுத்தினால், அப்போது நிலைமை என்ன ஆவது? அப்போது இரு அமைப்புகளில், காங்கிரஸ் நண்பர்களும், பொது மக்களும், எதனை, நம்ம சர்க்கார் என்று பார்ப்பது

கொண்டாடுவது? இவை, அரசியலில் தெளிவை விரும்பும் யாருக்கும் தோன்றக் கூடிய கேள்விகள்! 'நம்ம சர்க்கார்' என்று பொதுவாகப் பேசிவிட்டால் போதாது—சென்னையில் ஒன்றும், டில்லியில் ஒன்றும் இருக்கிறது—எந்தச் சமயத்திலும் எந்தப் பிரச்னையிலும் டில்லியின் தயவைச் சென்னை நாடியே தீரவேண்டிய நிலைமை இருக்கிறது. சென்னைக்குச் செந்தேன் போல் இனிக்கும் ஒரு திட்டத்தை டில்லி கடுவிஷம் என்று கருதி, வேண்டாம் அந்தத் திட்டம் என்று கூறினால், உறவும் உரசலும் மோதுதலாக, தாக்குதலாகவன்றோ மாறும்! இது நல்லதுதானா? விரும்பத் தக்கதுதானா? இதனைத்தானா மாகாண சுயாட்சி என்று அழைப்பது? இவ்விதமான மோதுதலின் போது, நமது காங்கிரஸ் நண்பர்கள், எதை 'நமது சர்க்கார்' என்று எண்ணிக் களிப்பது? இவை, மிக மிகக் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய பிரச்னைகள்.

மதுவிலக்குத் திட்ட சம்பந்தமாகக் கூட, மத்ய சர்க்கார் என்ன போக்குக் காட்டிற்று? மாகாண சர்க்கார் நிலைமையைச் சமாளித்து விட்டது. வெற்றி பெற்றுவிட்டது என்றேகூடக் கூறலாம்—ஆனால் இதன் பின் விளைவுகள் என்ன ஆகும்?

பூரண மதுவிலக்குத் திட்டம் எமது உயிர்ப்பிரச்னை, அதை நாங்கள் எப்படியும் நிறைவேற்றியாக வேண்டும்—என்று 'நம்மசர்க்கார்' நம்பர் ஒன்று தெரிவித்தது.

இப்போது நாட்டிலுள்ள நிலைமையை உத்தேசித்தும், நமது பண நிலைமையை உத்தேசித்தும் கூறுகிறோம், இப்போது பூரண மதுவிலக்குத் திட்டம்கூடாது—நிறுத்திவைக்கத்தான் வேண்டும்—என்று நம்ம சர்க்கார், நம்பர் இரண்டு, தெரிவித்தது.

முதலில், விளக்கம் கூறும் முறையில் தெரிவித்தது, பிறகு புத்தி கூறும் பாவனையில் பேசிற்று, பிறகு, எச்சரிக்கும் முறையிலே பேசிற்று, கடைசியில், 'எப்படியோ நாசமாகப் போ, எனக்கென்ன வந்தது!' என்று வெறுத்துக் கூறும் நிலையில், பேசிற்று.

மத்ய சர்க்காரிடம் பண உதவி கிடைக்காது—கடன் வாங்கவும் கூடாது—கையிருப்புப் பணத்தையும் பாழ் செய்யக் கூடாது—என்று தடைகள் விதித்துவிட்டு, இவ்வளவையும் ஏற்றுக் கொண்டு நடத்த முடியுமானால், உன் இஷ்டம்போல் மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்—என்று டில்லி தெரிவித்தது.

மதுவிலக்குத் திட்டத்துக்கு மட்டுமல்ல, ஜெமீன் ஒழிப்புத் திட்டத்துக்குக் கூட, எமக்கு, மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி தேவையில்லை, நாங்கள் நிலைமையைச் சமாளித்துக்கொள்வோம்—என்று கூறிவிட்டுச் சென்னை செயலில் ஈடுபடுகிறது.

இந்தத் துணிவு சென்னையிலுள்ள 'நம்ம சர்க்காருக்கு' வந்ததற்குக் காரணம், இங்கு, சர்க்காருக்குள்ள 'வருவாய்' அமோகம், என்பதனால் அல்ல, நெருக்கடிகளும் ஆபத்துகளும் ஏற்பட்டால் அப்போது உபயோகிக்கப்படவேண்டும் என்பதற்காக, பலகாலமாகச் சென்னை சர்க்கார், சேர்த்து வைத்திருக்கும் நிதி 33 கோடி ரூபாய் இருக்கிறது, என்ற தைரியம்!

இந்த முப்பத்து மூன்று கோடி இருக்கும் தைரியம், டில்லியின் எச்சரிக்கையைத் தட்டிக் கழிக்கும் தைரியத்தைச் சென்னை சர்க்காருக்கு அளித்தது—ஆனால் இந்தப் பணம் தீர்ந்துபோய், வேறு முக்கியமான திட்டம் தீட்டப்பட்டு, அந்தச் சமயத்தில், இப்போது டில்லி எச்சரித்தது போலவே, பணஉதவி கிடைக்காது—கடனும் வாங்கலாகாது, என்று கூறினால்; அப்போது மாகாண சர்க்காரின் நிலைமை என்ன ஆவது? 'நம்ம சர்க்கார்' என்று பூரிப்படையும் நபர்களைக் கேட்கிறோம். என்ன ஆவது? நாளாகவாக இதுபோன்ற பிரச்னைகள் அதிகரிக்குமே, அப்போதெல்லாம், எதற்கும்டில்லிவிளக்கம், டில்லி உபதேசம், டில்லி உத்தரவு, பெற்றாக வேண்டிய நிலைமை இருந்தால், 'நம்மசர்க்கார்' என்று எதைக் கொண்டாடப் போகிறார்கள் நமது நண்பர்கள்!

ஆகவே, பொதுவாக, நமது காங்கிரஸ் நண்பர்கள், மற்றோர் உண்மையையும் உணரவேண்டும், 'நம்ம சர்க்கார்' என்று அவர்கள் எந்த மாகாண சர்க்காரைப் பாராட்டுகிறார்களோ, அதனிடம், முழு அதிகாரம் இல்லை, எனவே, அந்தச்சர்க்கார் திட்டம் தீட்டியும் பயனில்லை;

மாகாண சர்க்கார், அளவில் பெ
தாகக் காணப்படும் ஒரு ஜில்
போர்டு போலத்தான், டில்லியி
கண்களுக்குத் தெரிகிறது. அவ்வி
மான முறையிலே, மாகாண சர்க்
ருக்கும் மத்ய சர்க்காருக்கு
இருக்கவேண்டிய 'தொடர்பு' நிர்
யம் செய்யப்பட்டிருக்கிறது.

மாகாணங்கள் இன்னின்ன அ
காரங்கள் மட்டுமே செலுத்தலா
என்று வரையறுத்து விட்டிருக்கிற
கள்; மத்ய சர்க்காரின் அதிகா
இதன் பயனாக, அதிகமாக இரு
மட்டுமல்ல, வளரவும் வழி செய்
பட்டிருக்கிறது. இதனால், மே
மேலும் மாகாண—மத்ய சர்க்
மோதுதல்கள் ஏற்படவே செய்
ஏற்கனவே பல மாகாணங்கள்,
கள் அதிகாரம் குறைக்கப்பட்டி
பது கண்டு குமுறுகின்றன.
கெடுத்தாலும் டில்லியை நாடி
தீரவேண்டிய நிலைமை இருப்ப
மன எரிச்சலை வளர்க்கிறது.
யது கிட்டாது போகும்போது
எரிச்சல் மாச்சரிய அளவுக்
செல்வதிலே வியப்பில்லை.

நமது மாகாணத்திலே, கட
பல மாதங்களாகப் பேசப்ப
வரும், ஜெமீன் இனம் ஒழி
திட்டம், இந்த நிலைமையை வி
கும் மிக முக்கியமான ஓர் எடுத்
காட்டு. மாகாண சுயாட்சி வெ
கேலிக்கூத்தாக்கப் பட்டிருப்ப
விளக்கும் விசாரம் தரும் உண்
'நம்ம சர்க்கார்' என்று எத
கருதுவது, சென்னையையா, டி
யையா, என்ற சிக்கலான பிரச்
யைக் காங்கிரஸ் நண்பர்களு
ஏற்படுத்திவிட்ட சம்பவம்.

'நம்ம சர்க்கார்' நம்பர் ஒன்
ஜெமீனுடன் இனமும் ஒழியவே
டும் என்று தீர்மானித்தது. இத
நாட்டு மக்களின், ஆதரவு மிகமி
பெரிய அளவிலே கிடைத்
எல்லாக் கட்சிகளும் ஆதரித்த
மாகாண காங்கிரசும், சென்
சட்டசபைக் காங்கிரஸ் கட்சி
பேராதரவு தந்தன. எனவே இ
திட்டம், வெற்றிபெறும் என்
சந்தேகத்திற்கு இடமற்றதாகி
டது. சில ஜரிகைக் குல்லாய்க
சன்னிதானங்களும், இருசார
கும் சேவை செய்யும் சட்டந்
களும் எதிர்த்தனர்—உரத்த
லிலேகூட அல்ல—முணு மு
தனர். சட்டசபையிலே, வை

ன் சார்பாக வாதாடினர், வரதாச் ாரி வைத்யநாத ஐயர் கூட்டம். வர்களை இந்நாட்டு ஏடுகள் பலவும், ளனம் செய்தன. சட்டசபையிலே வர்களுக்குச் சரமாரியான கண்ட ம்! அகராதி தீர்ந்தே போய்விட் டது! அவ்வளவு கண்டனம், கேலி வர்களுக்கு.

ஒரு திட்டத்துக்கு நாட்டு மக்க ின் பேராதரவும், சட்ட சபையின் யோதரவும் கிடைத்து, விஷமிகள் லருடைய எதிர்ப்பு மட்டுமே இருந்தால், ஜனநாயகக் கோட்பாட் ன்படி விஷமிகள் வெட்கித் தலை குனியும்படி, பெருவாரிக் கட்சிக் குப் பெருமிதமான வெற்றிகிடைக்க வேண்டியதுதானே முறை. இந்த ஜனநாயக உண்மையை நம்பிக் கொண்டுதான் 'தினசரியும்' அதன் திருக்குழந்தை காண்டீபனும், வறட் டுக் கூச்சலிடும் வக்கிரங்கள்— மௌண்ட்ரோடு பெருச்சாளிகள்— லஞ்சம் வாங்கும் பேர்வழிகள்— ன்றெல்லாம், மசோதாவை எதிர்த் தவர்களைக் கண்டித்து எழுதின. ஆனால், கடைசியில் நடந்ததென்ன! தினசரி'யின் முகத்திலே அசடு சொட்டுகிறது! மௌண்ட்ரோடு பெருச்சாளிகள், வெற்றித் தாண் டவமாடுகின்றன! சந்நிதானம் ளிக்கிறது! சட்டம் தூக்கிகள் சந்தோஷமடைகிறார்கள்! வரதாச் சாரி, வெற்றிச் சிரிப்புடன், வைத்ய நாதரைப் பார்க்க, இருவரும் சேர்ந்து, காளாவைப் பார்க்க, காளா, ஓமாந்தூராரைப் பார்க்க, ஓமாந்தூரார் ஓம் ரமணாய நமக! என்று கூறிவிட்டு அமருகிறார்! இனும்களை, மசோதாவில் சேர்க் காதே என்று டில்லி கட்டளையிட் டது—சென்னை, 'சரி' என்றது! மெஜாரடியை, மைனாரடி வென்றது! ஜனநாயகத்தைச் சனாதனம் தோற் கடித்தது, டில்லி தூருப்பின் உதவி யினால்! இந்த நிலையிலே, காங்கிரஸ் நண்பர்களுக்கு, எது, 'நம்ம சர்க் கார்'? ஜெமீன் இனாம் இரண்டும் ஒழியவேண்டும், சுறண்டல் முறை, எந்த உருவில்—பெயரில் இருந்தால் என்ன, அவை ஒழியவேண்டும் என்று வீரத்துடனும் விவேகத்துட னும் பேசி, ஏழையின் மனதை இன் புறச் செய்த சென்னை சர்க்கார், 'நம்ம சர்க்காரா'?—அல்லது மடி சஞ்சிகளை வாரி அணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு, அழாதேடா கண்ணு! உன்னை மிரட்டிய சென்னை சர்க்காருக்கு நான் தக்க பாடம் கற்பிக்கிறேன்—என்று கூறி, இனும் களைத் தொடாதே, எடு கரத்தை. என்று சென்னை சர்க்காருக்குக் கூறிவிட்ட டில்லி, "நம்ம சர்க் காரா"?—எண்ணிப் பார்க்கவேண் டாமா, காங்கிரஸ் நண்பர்கள்— நேர்மையாளர்கள்!

> "மனிதன் சுதந்தரத்தோடு பிறக்கின்றான். ஆனால், எங்கும் அடிமைத் தளைகளில் பிணைப் புண்டு கிடக்கிறதைக் காண்கி றோம்."
>
> —ரூசோ

எந்த நியாயத்தைக் காரணமாகக் காட்ட முடியும், இனும்களை ஒழிக்க சென்னை செய்த முடிவை, டில்லி மாற்றியதற்கு? ஏழைக்குக் காட்டும் பரிவா இது? எத்தர்களுக்குத் தரப் பட்ட பாதுகாப்பு அல்லவா! ஏன் இதை டில்லி செய்தது? இப்போது, வரதாச்சாரிகள், எவ்வளவு கெம்பீர நடை நடக்கிறார்கள்! அவர்களை மௌண்ட்ரோடு பெருச்சாளிகள் என்று ஏளனமாக எழுதினவர்களை இன்று, அவர்கள் பார்க்கிறார்களே! அந்தப் பார்வை சாமான்யமானதா? "சூரப்புலிகளே! ஏதோ சட்டசபை யிலே கொஞ்சம் அதிகாரம் கிடைத் ததும், எங்களைத் துச்சமாக எண்ணி னீர்களே! என்னவாயிற்று உங்கள் வீரப்பிரதாபம், ஆவேசப் பேச்சு எல்லாம்! உங்களிடம் உள்ள அதி காரம் பிரமாதமானது என்று எண் ணிக் கொண்டீர்கள்! இந்த வேதியர் களால் என்ன காரியம் சாத்யப் படும், சர்க்காரிலே நமக்குத்தானே செல்வாக்கு, என்று எண்ணி இறு மாந்துகிடந்தீர்கள். பித்துக் குளி களே! சுண்டைக்காய் அளவு அதி காரம் உம்மிடம் இருப்பது! டில்லி தேவதையின் முன்பு, உம்மால் என்ன செய்யமுடியும்? பார்த்தீர்க ளல்லவா, டில்லி தேவதையின் பிரம்படி விழுந்ததும், மசோதா, என்ன நிலையாயிற்று என்பதை! பைத்யக்காரர்களே! இருப்பது ஒரு சர்க்கார் அல்ல; இரண்டு! ஒன்று, சென்னையில்—இங்கு நீங்கள் எதை யும் சாதித்துக்கொள்ளலாம், என்ற அகம்பாவம் கொள்ளவேண்டாம்— மற்றொன்று டில்லியில் இருக்கிறது —அந்தச்சர்க்காரின்சொற்படிதான், உங்களுக்குச் செல்வாக்குத் தரும் சென்னை சர்க்கார் நடந்துகொள்ள வேண்டும். எங்களுக்கு, அங்கு, டில்லி தேவதையிடம் வரம் பெற முடியும்—வல்லமை உண்டு—வழி வகை தெரியும்! உங்களால், டில்லி யின் கட்டளையை மீறமுடியாது!!" —என்றல்லவா, அவர்களின் பார்வை பேசுகிறது. என்ன சொல்லுகிறார் கள் காங்கிரஸ் நண்பர்கள். ஏழை எளியவர்களை ஏமாளிகளாக்கி, காட்டு ராஜாக்களாகவும், வேட்டுக் குடியினராகவும், ஜெபமாலை ஜெமீன் தார்களாகவும் வேஷமிட்டுவாழ்ந்து வருபவரின் கொட்டத்தைத்தீரமாக மட்டந் தட்டுகிறது பாரீர்! நம்ம சர்க்கார்—என்று பூரிப்புடன் பேசிய வர்களின் முகத்திலெல்லாம், டில்லி, கரிபூசி விட்டதே, இதற்கு என்ன சொல்வது! எதனை 'நம்ம சர்க்கார்' என்று ஏற்றுக் கொள்வது?

இதுபோன்ற சிக்கல்கள் பலப் பல முளைத்தபடியேதான் இருக்கும் —புதிய பிரச்னைகள் தோன்றும் போதெல்லாம்.

மாகாண சர்க்கார் தீர்மானிக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும்— மாகாண சர்க்காருக்கு விருப்பமே யில்லாத திட்டத்தைப் புகுத்தியாக வேண்டுமென்று வற்புறுத்தப்படக் கூடும். அப்படிப்பட்ட சமயங்க ளிலே, நம்ம சர்க்காரிடம் அன்பு காட்ட வேண்டாமா, குறை கூறிக் கொண்டிருக்கலாமா —என்று பரி வுடன் பேசும் காங்கிரஸ் நண்பர்கள் என்ன எண்ணமுடியும்— அன்பை எங்கு செலுத்துவது?

ஒவ்வொரு மாகாணமும் உள்ளூர உணருகிறது, மத்ய சர்க்கார், அதிக மான அளவிலும் அவசியமற்ற முறையிலும், மாகாண விவகாரங் களிலே தலையிடுகிறது என்பது பற்றி.

அசாம் மாகாணப் பிரதிநிதி ஒரு வர், மத்ய சர்க்காரின் இத்தகைய போக்கைச் சில திங்களுக்கு முன்பு கண்டித்துத் தீப்பொறி பறக்கப் பேசினார். மத்ய சர்க்கார், அசாமுக் குச் செய்யவேண்டிய அளவு நன்மை களைச் செய்வதில்லை, ஆனால், எங்கள் மாகாணத்திலிருந்து ஏராளமாகப் பணத்தை மட்டும் பெற்றுக்கொள் கிறது. டில்லியில் ஒரு பெரிய உத் யோகத்தில்கூட அசாமியர் இல்லை! இப்படி அசாமை நடத்துவானேன்? இதைவிடத், தனியாக விட்டுவிடுங் கள்—அசாம் தனித்து வாழ முடி யும், என்றெல்லாம் பேசினார்.

ஒரு ஆந்திரத் தலைவர், ஆந்திர

மாகாணத்தைத் தனியாக அமைக்காவிட்டால், மத்ய சர்க்காரே வேண்டாம் என்றுகூட ஆந்திரர் தீர்மானித்துவிடக்கூடும், என்று சில திங்களுக்கு முன்பு கூறினர்.

வங்காள மாகாணத்தின் குறையைப் போக்காமல், பீகாரிடம் பரிவு காட்டுகிறது மத்திய சர்க்கார், என்று வங்காளம் கோபம் பொங்கும் குரலில் பேசுகிறது.

பல்வேறு மாகாணங்களிலே இந்தக் குமுறல் ஏற்பட்டிருப்பது கண்டு, பெருந்தலைவர்கள், மாகாணப் பித்துக்கூடாது! என்று உபதேசம், செய்தபடிதான் உள்ளனர். உபதேசம் அவர்களின் பெருங்குணத்துக்கு எடுத்துக்காட்டு ஆகிறதேயன்றி, மாகாணங்களிலே வளர்ந்து வரும், உரிமைஉணர்ச்சியை ஒழித்துவிடக்கூடியதாக இல்லை? இந்தநிலைமை வளரும்போது, எது நமது சர்க்கார் என்ற பேச்சும் வலுவடையும்! விவாதக்கட்டத்துக்குச் செல்லும் — விரோதக்கட்டத்துக்கும் விரைந்து சென்றுவிடக்கூடும்.

மத்யசர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம், மாகாணங்களின் மனதிலே, இந்த 'மாச்சரியத்தை' மூட்டிவிடக்கூடியதாகவே உள்ளன.

மாகாணத்துக்கு மாகாணம் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் போதும், மாகாணத்துக்குள்ளாகவே, சிக்கல் ஏற்படும் போது, மத்தியசர்க்காரின் போக்கு, மக்களின் கண்டனத்துக்கு உள்ளாகியே தீரும்.

இவ்வளவும், மத்தியசர்க்காரிடம் அக்ரமமான முறையில், மாகாண சுயாட்சித் திட்டத்தைத் தகர்க்கும் முறையிலே, அதிகாரம் தரப்பட்டிருப்பதனால் நேரிடும் கேடுதான்.

'நம்மசர்க்கார்' என்று இங்குள்ள, சர்க்காரிடம் பரிவுகாட்டும் காங்கிரஸ் நண்பர்கள், மத்யசர்க்காரிடம் இவ்வளவு அதிகாரம் சென்றுவிடும்படி ஏன் அனுமதிக்கிறார்கள்? எங்கே அதுபற்றிச் சிந்தித்தார்கள்?

மாகாண சர்க்காருக்குத்தான் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்வுக்கு வசதிகள் செய்யவேண்டிய மகத்தான பொறுப்பு இருக்கிறது— கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உணவுஉடை நல்குதல் ஆகியகாரியங்கள், மாகாணசர்க்காருடையன. சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதும், மாகாணசர்க்காருடையது. மாகாணத்திலே, தொழில் வளத்தைப் பெருக்கும் பொறுப்பு, மாகாணசர்க்காருடையது.

இந்தப்பொறுப்புகளைத் திறம்படச் செய்தால்தான், 'நம்மசர்க்கார்' ஏற்பட்டது, அதனால் நமதுவாழ்வு சுகப்பட்டது என்று மக்கள் கூறவும் களிக்கவும் முடியும்—'நம்மசர்க்கார்' என்று சொந்தம் கொண்டாடுவதற்கும் பொருள் ஏற்படமுடியும். இவ்வளவு பெரிய பொறுப்புகளுக்கும் வெற்றிகிடைக்க வேண்டுமானால், மாகாணசர்க்காருக்கு, ஏராளமான பணம்வேண்டும். கட்டாய இலவசக் கல்வித்திட்டத்துக்குமட்டும்நாற்பது கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படுகிறதாம்! பலப்பல கோடி ரூபாய் தேவை, பயனுள்ள பல திட்டங்களை நிறைவேற்ற. பாதைகள் வேண்டும் புதிது புதிதாக! இப்போது மழை பெய்தானதும், பல கிராமங்கள் தீவுகளாகிவிடுகின்றன! வெள்ளம் வந்தால், பல கிராமங்களே காணாமற் போய்விடுகின்றன! ஒரு கிராமத்துக்கும் மற்றோர் கிராமத்துக்கும் தொடர்பு, 'இந்த லோகத்துக்கும் அந்த லோகத்துக்கும்' இருப்பதாகக் கூறும் தொடர்புபோல இருக்கிறது.

பாலங்கள் வேண்டும், பலப்பல, புதிது புதிதாக. தேக்கங்கள் தேவை! நீர்ப்பாசன வசதிகள் தேவை! உரம் தேவை! விதை தேவை! ஊருக்கோர் பள்ளிக்கூடம் தேவை! கிராமத்துக்கு வைத்ய வசதி தேவை! கர்ப்பிணிகளுக்கு வாழ்வு அளிக்க, மருத்துவ வசதி தேவை! காலரா போன்ற கொடுநோய் வராமல் தடுக்கும் முறைகள் தேவை—வந்துவிட்டால், சேதம் அதிகம் நேரிடாதபடி வைத்ய வசதி செய்துதரவேண்டும். எண்ண எண்ணப்பெருகும், வசதி அதிகரிக்க அதிகரிக்க, மேலும் பல புதிய வசதிகள் தேவைப்பட்டே தீரும். இவைகளுக்கெல்லாம் பல கோடி ரூபாய் வேண்டும். ஆனால் பணம் உண்டோ? இல்லை.! ஒவ்வொரு மந்திரியும், போகிற இடத்திலெல்லாம், தர்மவான்களே! கனதனவான்களே!! ஏழைக்கு இதம் செய்யுங்கள்! ஒரு பள்ளிக்கூடம் கட்டுங்கள், புண்யம் உண்டு! ஒரு வைத்யசாலை கட்டுங்கள், புண்யம் உண்டு!-என்று உருக்கமாகப் பேசுகிறார்கள். மாலையுடன் அங்கு வந்துள்ள 'கனதனவான்' இந்த உபதேசத்தைக் கேட்கவா வந்தார்! மருமகளுக்கு வேலை கேட்கவோ, மண்டிக்கடை நடத்தும் லைசென்சு கேட்கவோ, அடுத்த தேர்தலுக்கு அடியேனை நியமியுங்கள் என்று கெஞ்சவோ, வந்தார்—அவரிடம் உபதேசம் என்ன பலனைத் தரும்! தந்தாலும், கருணைகரர்களால் தீர்ந்து விடாதே, நாட்டிலே உள்ள கஷ்டங்கள்! பணம் வேண்டும், ஏராளமாக மட்டுமல்ல, மேலும் மேலும் வேண்டும், வளர்ந்தபடி இருந்தாகவேண்டும். ஏனெனில் 'ஆண்டவன் தயவாலே, ஏதோ நாம் செய்யவேண்டியதை எல்லாம் செய்தாகிவிட்டது' என்று கூறி ஓய்வு எடுத்துக்கொள்ள முடியாது, மக்களின் தேவைகள் புதிது புதிதாக வளர்ந்தபடியே இருக்கும், அவை வளர வளர, செலவினம் வளரும், அதற்குத் தக்கபடி, சர்க்காருக்கு வருமானம் அதிகரிக்கவேண்டும்.

மனிதன் தன் தேவைகளை அதிகப்படுத்திக் கொண்டேபோவது, ஒரு வகை நோய், நவயுக மோகம்—அது ஆகாது, கூடாது, கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி; வீண் ஆடம்பரத்தை விரும்பாதே! என்றெல்லாம் உபதேசம் செய்துவிடலாம். உபதேசம் உருவான காரியத்துக்குப் பயன்படாது என்பது மட்டுமல்ல, உபதேசிகளே அந்தப்படி நடந்துகொள்ள முடிவதில்லை என்பது மட்டுமல்ல, அத்தகைய உபதேசமே, தேவையுமற்றது.

எளிய வாழ்க்கைதான் முதலமைச்சருடையது! கிராமவாசிதான்! அணிவது சாதாரண உடைதான்! ஆனால் ஆகாய விமானம் தேவைப்படுகிறதே அவருக்கும்!! தேவை, அவருக்கு எந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஓமந்தூரிலிருந்து திண்டிவனத்துக்கு இரட்டை மாட்டு வண்டியிலே போகும், மிகமிக எளிய வாழ்க்கை நடாத்தி வந்தவர், இதோ சென்னைக்கும் டில்லிக்கும் விமானத்திலே யல்லவா பறக்கிறார்! இரட்டை வண்டியிலிருந்து விமான அளவுக்கு, அவருடைய தேவை, அவரையும் அறியாமல் திடீரென வளர்ந்துவிடவில்லையா? நவநாகரீக மோகமா அது? அவருடைய கோலம் இதைப் பொய்யாக்குமே! நீறுபூசிய நெற்றியுடன் விளங்கும், பக்த இராமசாமியார், விமானம் ஏறிச்செல்லவேண்டி நேரிடுகிறதே! தமது தோட்டத்துச் செடி கொடிகளையும் காய்கனிகளை

யும், வேலியையும் அதனோரத்திலே ஓடும்பாம்பையும் ஓணானையும் காட்சிகளாகக் கண்டுகொண்டு, கிராமிய முறையிலே, எளிய வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்தாரே ஓமந்தூரார், இதோ, மைசூர் மகாராஜாவின் அழைப்பு வந்துவிட்டது, இவரும் சம்மதித்து விட்டாரே, மைசூர் சென்று தசரா காண! தசராவின்போது, அவர் எளிய வாழ்க்கையின்போது கண்டவைகளையா காணப்போகிறார்! ஆயுட்காலம் பூராவும் அகமகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்கக் கூடிய அளவுக்கு, ரம்மியமான காட்சிகளைத் தானே காணப்போகிறார்! மாயாண்டியைக் கண்டு, மணிலாக்கொட்டை மாசூல் இந்த வருஷம் எப்படி என்று கேட்டுக் கொண்டிருந்தவர், மைசூர் மன்னரை நோக்கி, அந்த மாந்துளிர் நிறமாக இருப்பதுதான் கோமேதகமா? பச்சைநிற மோட்டாரில் வந்து இறங்குபவர்தான் பரோடா கோடீஸ்வரரா! அந்தச் சரிகைவேஷ்டிக்காரர்தான் ஆஸ்தான வித்வானா! என்று இவைகளைத்தானே கேட்க வேண்டும். எந்த அளவுக்கு அவருடைய 'எளிய வாழ்க்கை' மேலுக்கு ஏறிவிட்டது. ஒரு தேவை மற்றோர் தேவையைத்தான் உண்டாக்கும்—இது இயற்கை நியதி—எந்த உபதேசியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஓமந்தூரார் என்ன, அவருடைய குருநாதர் ரமணரிஷியையே எடுத்துக் கொள்வோமே. சந்தடியற்ற, மக்களின் தொடர்பற்ற, மலைச்சாரல் தான் முதலில் அவருக்குத் தேவைப்பட்டது! பிறகு மலைமீது, சிறு குடிசை! பிறகு மேலும் சில குடிசைகள்! பிறகுகுடிசைகள் வீடுகளாயின, வீடு மாளிகையாயிற்று, மாளிகை இப்போது அரண்மனையாகிவிட்டது! தேவை வளரவில்லையா! அவர் புகழ் ஓங்க ஓங்க, மலைமீதிருந்த மாளிகையின் உயரம் ஓங்கி வளருகிறதே! காட்டுமலர்போதும் பூஜைக்கு என்ற நிலைபோய், நந்தவனம்! நவீன நாகரீக வசதிகளிலே எதைவேண்டாமெனக் குருநாதர் வெறுத்துத் தள்ளிவிட்டார்! குருவின் போக்கே இது, சீடரைப்பற்றிக்கூறவா வேண்டும்! இவர்களின் வாழ்க்கை மாறிவிட்டதையும், வசதிகளும் தேவைகளும் வளர்ந்துவிட்டதையும், நாம் கண்டிப்பதாகவோ, கேலி செய்வதாகவோ கருதக்கூடாது—நாம்கூறுவது, தேவைகளை அதிகப்படுத்திக் கொள்ளக் கூடாது, அது ஒருநோய் நவநாகரீகமோகம் என்று உபதேசம் செய்யும் போக்குக் கூடாது என்பதைக் காட்டவே இவைபற்றிக் கூறினோம்.

"எந்தச்சனசமூகத்தில்நாளிது வரை யாராவதொருவருடைய கடவுள் பக்தியை தெரிவிப்பதற்கு நெற்றியில் நாமம் முதலிய குறிகள் நீண்டோ அகண்டோ வட்டவடிவமாகவோ இருக்க வேண்டியது 'அவசியமென்றும் கருதப்படுகின்றதோ அந்த ஜன சமூகத்தில் அரசியல் சுதந்திரத்தைப் பரவச்செய்வது ஒருக்காலமும் முடியாத காரியம். மத சம்பந்தமாகவோ இராஜீய சம்பந்தமாகவோ சமூக சம்பந்தமாகவோ மற்றும் வேறு எது சம்பந்தமாகவானாலும் சுதந்திரப் பிரசாரம் செய்யமுற்பட்டால் அதில் முதலாவதாக மனித சுதந்திரம் கொஞ்சமாவது வெளிப்பட வேண்டும். எந்த மதத்தில் பகுத்தறிவோடு யோசனை செய்யும் மனோபாவத்திற்கு இடம் சற்றேனும் இல்லையோ அதில் இராஜீய சுதந்திர நோக்கத்தைப் புகுத்தல் அசாத்தியமில்லாவிட்டாலும் நிச்சயமாகச் சுலபத்தில் சாத்தியமாகக் கூடிய காரியம் அல்ல என்றே சொல்லுவேன்."

—லாலாலஜபதிராய்

மாகாண மக்களின் தேவைகள் அதிகமாக உள்ளன. அடிப்படைத் தேவைகளே இன்னமும் கவனிக்கப் படவில்லை.

கால்நடை மாநாடு, சுகாதார மாநாடு, கல்வி மாநாடு, ஸ்தலஸ்தாபன மாநாடு, என்ஜினியரிங் மாநாடு, என அடிக்கடி இங்கு கூடும் மாநாடுகளிலே, அமைச்சர்கள் சேவையின் பெருமைபற்றியும், அதிகாரிகளின் பொறுப்புணர்ச்சி பற்றியும், மேனாட்டு முறைகளெல்லாம் கீழ்நாட்டிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்டவைகளே என்ற பூர்வ பெருமை பற்றியும், வாய்மை, தூய்மை ஆகிய குணங்கள் பற்றியும் உபதேசித்தான பிறகு, ஒவ்வொரு துறையையும் நிர்வகிக்கும் பொறுப்பாளர், ஒரு குறை அழுது தீர்க்கிறார், தமக்குள்ள கஷ்டத்தை. நமது மாகாண சர்க்காரின் திட்டத்தின்படி, பொதுமக்களின் வைத்திய வசதிக்காகச்செலவிடப்படும் பணத்தைக் கணக்குப் பார்த்தால், சராசரி ஆளுக்கு ஒன்றேகாலணுச் செலவிடப்படுகிறது! இந்த நிலையிலே, நாங்கள் என்ன சாதிக்க முடியும். காலரா வந்தால் ஆயிரக் கணக்கில் மக்கள் மாண்டுபோகிறார்கள் — மாபாதகம் தான்—ஆனால் நாங்கள் என்ன செய்வது! காலரா ஒழிப்புக்கும் தடுப்புக்கும் செலவிடப்பணம், சர்க்காரால் தாராளமாகத் தரப்பட்டால் தானே! சுத்தமான குடிதண்ணீர் வசதியே, பெரும்பாலான மக்களுக்குக்கிடையாது! பணம்இல்லை என்று சர்க்கார் கூறுகிறது—கிடைத்ததைக் கொண்டு, ஏதோ எங்களால் ஆனதைச் செய்கிறோம், வேறென்ன முடியும்!—என்று வேதனைக் குரலில் பேசுகின்றனர். அரைப்பட்டினி ஆசிரியர்களைக் கொண்டு கல்வியைப் பரப்ப முடியுமா என்று ஒரு அதிகாரி கேட்கிறார்! எலும்புந் தோலுமாக இருக்கும் கால்நடையைக் கொண்டு, பாலும் வெண்ணெயும் பெறமுடியாதே என்கிறார் மற்றோர் அதிகாரி! இப்படிக் கூறும் உரைகளைக் கேட்டபிறகு, உபதேசம் செய்த அமைச்சர்கள், "உண்மைதான்—பணம் போதுமான அளவு இந்த அவசியமான காரியங்களுக்குக் கூடத்தரப்படத்தான் இல்லை—தரமுடியவில்லை—பணம் இல்லை—வருமானம் அவ்வளவுதான்—என்ன செய்வது" என்று கூறிவிடுகின்றனர். இறுதியில், ஏதோ நம்மாலானதைச் செய்வோம் என்று எண்ணிக் கொண்டு 'ஜனகணமன' பாடிவிட்டுக் கலைகிறார்கள்.

இந்த மாநாடுகள் ஒவ்வொன்றும், அரசமரம் சுற்றும் அம்மை, வீடு திரும்பியதும் கால் கடுத்ததற்குச் சுடுநீர் தேடும் கதைபோல, மாநாடு முடிந்த பிறகு, "என்ன சார்! இந்த மந்திரிகள் இப்படிப் பொறுப்பற்றுப் பேசுகிறார்களே!" என்று அதிகாரிகள் பேசிச் சலித்துக்கொள்ளவும், "இந்த உத்யோகஸ்தர்களுக்கு, ஊர் மக்களைப்பற்றி ஒருதுளியும் கவலை கிடையாது—சம்பளம் ஆயிரக் கணக்கில் கிடைக்கவேண்டும் என்பதிலே தான் இவர்களுக்கு நாட்டம், பேராசைக்காரர்கள்"! என்று மந்திரிகள், பெரிய அதிகாரிகளைப் பற்றிக் கண்டித்துப் பேசவுந்தான் வழி கோலுகின்றனவே தவிர, உருவான வேறு காரியத்துக்குப் பயன்படுவதும் இல்லை.

இந்நிலையில் உள்ள நாட்டிலே, மக்

களின் நலனுக்காகச் செய்யப்பட வேண்டியவைகள் எவ்வளவோ உள்ளன. ஆனால் போதுமான பணவசதி இல்லை. மாகாண நிலைமை அவ்விதமாக்கப்பட்டிருக்கிறது.

வளரும் செலவினம், மாகாண சர்க்காருக்கு—ஆனால் வருவாய் தரும் இனமோ, வளரக் கூடியது அல்ல!

வரிமுறையிலே, இருவகைஉண்டு—வளரக்கூடிய முறை, வளரமுடியாத முறை—(Elastic—Inelastic) நிலவரி, சொத்துவரிபோன்றவைகள், பின்னதற்குச் சான்றுகள், தொழில்வரி, வருமானவரி, விற்பனை வரி, புகையிலைவரி போன்றவைகள், முன்னதைச் சார்ந்தவை.

இந்த இருமுறைகளில், வளரக் கூடியவரிகளைமத்யசர்க்காரிடம் ஒப்படைத்து விட்டனர்—வளரமுடியாத வரிவகைகளை மாகாணங்களிடம் தந்து விட்டனர். மாகாணங்களின் செலவோ ஒரு குறிப்பிட்ட அளவோடு நின்றுவிடக்கூடியதல்ல. நாம் குறிப்பிட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யச்செய்ய, செலவினம் வளர்ந்தவண்ணம் இருக்கும். எனவேதான், எதற்கெடுத்தாலும், மாகாணசர்க்கார், பணம் இல்லை, பணம் இல்லை, என்று கதறவேண்டி இருக்கிறது. வருமானத்தின், சத்தானபகுதி, டில்லிக்குக்காணிக்கையாக்கப்பட்டு விடுகிறது! எனவே, மாகாணசர்க்காரால், மக்களுக்குத் தேவையான அடிப்படை நன்மைகளைச் செய்யவும் முடிவதில்லை. திட்டம் தீட்டித்தான் பலன் என்ன?

“பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாலில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி, இன்னும் அதிகமாகவே கூட வருமானவரி கொடுக்கிறதாகக் கூறுகிறார்கள். ஆனால், ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்து விட வேண்டியதாக இருப்பதுடன், தாங்கள் சுதந்திரமாக இருந்தால் எவ்வளவு வேலையைச் செய்ய முடியுமோ, அதனிலும் இரண்டு மூன்று மடங்கு தினசரி அதிகமாக உழைக்கவேண்டியிருக்கிறதே என்பதை எடுத்துச் சொல்வோர் யாரும் இல்லை.”

—பர்னாட்ஷா

நகரசபைகளின்மூலம், நகரமக்களின் நன்மைகள் கவனிக்கப்பட வேண்டும், ஆனால் அதற்குவேண்டிய பணவசதியை மாகாணசர்க்காரிடமே பெறவேண்டி இருக்கிறது. பணம்கேட்க முடிகிறதோ!

“உதவி நிதிக்காக முனிசிபாலிட்டிகள் மாகாணசர்க்காரிடம் செல்ல எவ்வாறு கூச்சப்படுகின்றனவோ, அதேபோல் மாகாண சர்க்காரும் மத்யசர்க்காரிடம் உதவிகோரக்கூச்சப்படுகிறார்கள்” என்று கோவையில் நிதிமந்திரி, கோபாலரெட்டியார் பேசினார். கூச்சமாம்! கூச்சத்தை விட்டுக்கேட்டும் பார்த்தார்கள் நகரசபைத்தலைவர்கள், பண உதவிவேண்டும் என்று. பதில் என்ன கிடைத்தது? பணமா? அது தான் இல்லை! மற்றோர் ரசமான பதில்!!

“உங்கள் கஷ்டமும் என் கஷ்டமும் ஒரேவிதமானதாகவே இருக்கிறது. உங்களிடமும்பணம் இல்லை; என்னிடமும் பணம் இல்லை.” என்று கூறினார், நிதிமந்திரிகோபால ரெட்டியார், நகரசபைத்தலைவர்கள் மாநாட்டில். அனைவரும் சிரித்தனராம்! எதை எண்ணியோ!!

நகரசபைகளிலே கொலு வீற்றிருந்தால் மட்டும் போதாது, மக்களின் தேவைகளை உணர்ந்து நன்மைகளைச் செய்யவேண்டும், இதற்குச் சர்க்காரிடமிருந்து பண உதவி கிடைக்கவேண்டும், கேட்டுப்பார்ப்போம், குறைகளைக்கூறி முறையிட்டுப் பார்ப்போம், என்று எண்ணி, மாகாண நகரசபைத்தலைவர்கள் ஓர் மாநாடு கூட்டினர் சென்னையில், சென்ற திங்கள். மந்திரி கோபால ரெட்டியார் வந்திருந்தார். அவர் அளித்தபதில் நாம்மேலே கூறியது—என்னிடமும் பணம் இல்லை—உம்மிடமும் இல்லை—என்று. நகைச்சுவைக்கு நல்ல எடுத்துக்காட்டுத்தான், ஆனால் மக்களின் நன்மை என்ன ஆவது, இப்படி மந்திரி கைவிரித்தால்.

ஆனால் அவர் என்னசெய்வார்? அவர் நிலையே அப்படியாகிவிட்டது.

கொழுத்தபணம்தரும் வருமான வரி, மத்யசர்க்காருக்குப் போய்விடுகிறது. இதைப் பெற்றுக்கொண்டானபிறகு, ஏதோ ஓர் அளவு, மாகாணத்துக்குத் திருப்பித்தரப்படுகிறது. இந்த முறை சரியல்ல, இதன் பலனாகநேரிடும் விளைவுகள், வேதனை தருகின்றன, என்பதை நிதிமந்திரி வெளிப்படையாகவே இப்போது பேசத் தொடங்கிவிட்டார்.

மாகாணசர்க்காரின் உரிமையாக உள்ள நிலவரிவளரக்கூடியதல்ல—விற்பனைவரி, இப்போது கொழுத்த பணம் தருகிறது என்றபோதிலும், இதன் அளவும் குறைந்துதீரும், மேலும் இந்தவரி பெரிதும் ஏழைகளையே பாதிக்கக்கூடியது, எனவே பணம் வேண்டுமென்பதற்காக விற்பனைவரி விகிதத்தைக் கண்ணைமூடிக் கொண்டு அதிகப்படுத்திக்கொண்டே போக முடியாது.

குறையும் நிலவரி; வளர விடக்கூடாத விற்பனை வரி, எனும் இருவகை வருமானத்தைக் கொண்டு, மாகாண சர்க்காரால், மக்களாட்சியின் மாண்பு துலங்கும் விதத்திலே, ஆட்சி செய்ய முடியாது.

நிதிமந்திரி, வானொலியில் பேசுகிறார், கழகங்களிலே கதறுகிறார், சட்டசபையிலேயும் சஞ்சலத்தைத் தெரிவிக்கிறார், மத்ய சர்க்கார், மாகாணத்திலே வசூலிக்கும் வருமான வரி, கம்பெனிவரி, புகையிலை வரி போன்றவைகள். பல கோடி ரூபாய், இதிலே, மிகமிகச் சிறுபகுதி தான் திருப்பித்தரப்படுகிறது; இது போதுமானதல்ல, என்று புலம்புகிறார், இன்னும் கொஞ்சம் தரவேண்டுமென்று கெஞ்சுகிறார், இப்படிப், பணம் இல்லாத நிலையிலே மாகாணத்தின் வளம் எப்படி வளரும் என்றுகேட்கிறார், முறையிடுகிறார்.

இவர் மட்டுமல்ல. சென்னை மாகாண நிதி நிலைமையைப்பற்றி ஆராய்ந்து கருத்துரைகூற அமைக்கப்பட்ட, கமிட்டியார், இதனையே வலியுறுத்திக் கூறியுள்ளனர்—என்ன தான் சிக்கனம் செய்தாலும், சென்னை மாகாணத்துக்கு இப்போதுள்ள வருமானவழிகளை மட்டும் கொண்டு மக்களின் வாழ்க்கைக்கு இன்பம் தரத்தக்க எதனையும்செய்ய முடியாது என்று கூறிவிட்டது கமிட்டி.

கோபாலர், இங்கு பேசுவதுடன் மட்டுமல்ல, அரசியல் நிர்ணயசபையிலேயும் இதுசம்பந்தமான பிரச்னையை எழுப்பினாராம்.

அடிக்கடி அவரும் டில்லிவட்டாரத்துக்குமனுச்செய்தபடிதான் இருக்கிறார்.

ஏன் இப்படி நிலைமை இருக்க

வேண்டும்! கிடைக்கும் பணத்தைத் தூக்கிக்கொண்டுபோய் டில்லியில் போட்டுவிட்டு, தாழ்வாரத்தில் நின்று பல்லிளிக்கும் போக்கு எதற்கு?

மத்யசர்க்காரின் பொறுப்புகளை வரையறுத்து, அந்தப் பொறுப்புகளுக்கான செலவு வகையை நிர்ணயித்து, அந்தச்செலவுக்காக, இன்னின்ன மாகாணம் இவ்வளவு தரவேண்டும் என்று தீர்மானித்துவிட்டால், பிச்சைப் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு, டில்லிப்பட்டணம் போகத்தேவை இருக்காதே!

'இந்தியாவின்' பாதுகாப்பு மகத்தான பொறுப்பு. ஆம்! இதை மத்ய சர்க்கார் கவனித்துக்கொள்ளும். சரி! இதற்கு இவ்வளவு கோடிரூபாய் தேவை. நல்லது. இதற்காக ஒவ்வொரு மாகாணமும், தத்தம் வசதிக்கேற்ற அளவு, பணம் தரவேண்டும். நியாயம். பம்பாய், கோடீஸ்வரர்கள் உள்ளமாகாணம், கொஞ்சம் தாராளமாகத் தரட்டும். சென்னை தொழில் வளம் அதிக்கரிக்காத நிலையிலுள்ள இடம், பணத்தின் அளவு சற்றுக் குறைவாக இருக்கட்டும். இப்படி ஓர் முறையை ஏன் வகுத்துக் கொள்ளக்கூடாது!

'நம்மசர்க்கார்' என்று சொந்தம் பேசும் காங்கிரஸ் நண்பர்கள், நம்ம சர்க்கார் பணப்பெட்டியைடில்லியில் கொடுத்துவிட்டு, அவ்வப்போது சென்று உண்டியைக் குலுக்கிப் பணம் கேட்கும் கோலத்தை ஏன் கொள்ளவேண்டும் என்று கேட்டனரா? கேட்பரா? கோபாலரே குமுறுகிறாரே — மந்திரி என்ற பொறுப்பான நிலையில் இருப்பவர், இதற்குமேல் வெளிப்படையாகப் பேசமுடியாது, முறையிடத்தான் முடியும். சற்று முடுக்காகப்பேசினால் 'நீயும் திராவிடநாடு கேட்கிறாயோ' என்று டில்லி சீறும். ஆகவே அமைச்சர் அதற்குமேல் விளக்கமாகப்பேச முடியாது. வெளிப்படையாகக் கூறுகிறார், நாட்டுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லை, பணம் பெறும் வசதி இல்லை, வரியிலே, ருசியும் பசையும் உள்ளவகை டில்லிக்குப் போய்விடுகிறது, என்று தெரிவிக்கிறார். "நம்ம சர்க்கார்" என்று பரிவு காட்டும் அன்பர்கள் என்ன செய்கிறார்கள்? ஏன் கூறக்கூடாது, எல்லா வகையான வரியும், மாகாணமே வசூலிக்கும், ஏனெனில் மாகாணசர்க்கார் ஆற்றவேண்டிய கடமைகள் ஏராளமாக உள்ளன— வசூலித்தான பிறகு, மத்ய சர்க்காருக்கு, நாட்டுப்பாதுகாப்புப் பொறுப்புக்காக ஏற்படும் செலவுக்காக, எங்கள் மாகாணத்தின் நிலைமைக்குத்தகுந்தபடி, (கோட்டா) அளவு பணம், தருகிறோம், அதுதான்முறை என்று ஏன் கூறக்கூடாது? கூறுவரா?

இப்போது, 'நம்மசர்க்கார்' மீது, எதிர்க்கட்சிக்காரர் ஏதேதோ குறை கூறுகிறார்கள் என்றெண்ணிக்கோபப்படும் நண்பர்கள், 'நம்ம சர்க்கார்' வந்தும் நாடு சீர் படவில்லை, அதற்குக்காரணம் நம்மசர்க்காரிடம்பணம் போதுமான அளவு இல்லை, அதற்குக்காரணம், பெரும்பாலானபணம் டில்லிக்குப் போகிறது, டில்லியிலே இருந்து, பணம், வேட்டு, வெடிகுண்டாக, கவர்னர்ஜெனரல் சம்பளமாக, தூதுவர்களின் தர்பாருக்காகச் செலவாய்விடுகிறது என்ற உண்மைகளை உணரும் காலம் வரத்தான் போகிறது.

கட்டுக்குஅடங்கமறுக்கும்காளைகளையும், காட்டுமிருகங்கள் உலவும் வயல்வெளிகளையும், காலராவால் மடியும் கிராமவாசிகளையும், பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களையும், பாதைகளால்தொடர்பு பெறாத சிற்றூர்களையும், வேலையற்ற மக்களையும், வைத்ய வசதியற்ற நிலைமையையும், காணக்கணப்பிறகும்! நம்மசர்க்கார் தான், ஆனால் நாடு இப்படியா இருக்க வேண்டும், நியாயமா? — என்று, எண்ணாமலிருக்க முடியுமா? ஆலைகளில் எப்போதும்போல் முதலாளிகள் ஆட்சி செலுத்துவதையும் குடிசைகளில் வழக்கம்போல் பாட்டாளிகள் பதைத்துக்கிடப்பதையும், மிராசுதாரர்கள் எப்போதும்போல மின்னும் உடலுடன் இருப்பதையும், வயலோரத்தில் கஞ்சிக்கலயத்துடன் உழவன் காட்சி அளிப்பதையும், காணக் காண, அவர்களின் மனம் என்ன இரும்பா, கரையாமலிருக்க.

இந்தக் கஷ்டங்களைப்போக்காமல் ஏன் 'நம்ம சர்க்கார்' காலத்தைஓட்டுகிறது, என்று கடுங்கோபம் அவர்களுக்குப்பிறக்கத்தான் போகிறது. இப்போது யாரரின் கண்கள், நமது கழகக்கூட்டத்தின்மீதுகற்களைவீசச் சுறு சுறுப்பாக வேலை செய்கின்றனவோ, அதே கண்கள், இத்தகைய காட்சிகளைக் கண்டு, கண்ணீர் உகுக்

# திராவிடர் கழகத் தனி மாகாண மாநாடு

ஈரோட்டில் 23, 24—10—48 தேதிகளில் திராவிடர் கழகத் தனி மாகாண மாநாடு நடைபெறும். மீண்டும் இந்தி எதிர்ப்பு அறப்போரைத் தொடங்குவதற்கான திட்டங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்படும். அனைவரும் தவறாது வருக.

**வரவேற்புக் கமிட்டியார்.**

"உள்நாட்டு நிர்வாகத்தில் ஏற்படும் வெட்டிச் செலவுகளை மட்டும் குறைத்துக் கொண்டால் போதாது. மத்ய சர்க்காரால் வெளிநாடுகளிலே தூதர்களுக்கென்றும் அவர்களுடையதேவைகளுக்கென்றும் பலகோடி ரூபாய்கள் வாரியிறைக்கப்படுகின்றன. அவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவர்கள் செலவு செய்யத்தான் வேண்டும் என்ற வாதம் இருந்தாலும், சராசரி மனிதனின் அன்றாட வரவு ஒன்றேகாலணாத்தான் என்றிருக்கிற நாட்டின் பிரதிநிதியாகத்தான் நாம் வந்திருக்கிறோம் என்று அவர்கள் நினைத்து, சிக்கனத்தைக் கையாளப் பழக்கப்படுத்த வேண்டும்."

—காலச்சக்கரம்

கத்தான் போகின்றன. இதுவோ 'நமது சர்க்கார்' என்று அவர்களும் பாபுபுருஷோத்தமதாஸ்தாண்டன் போல் கண்ணீர் சொரியத்தான் போகின்றனர். இப்போது நமது கழகத்தோழர்களின் உடலிருந்து ஒழுகும் இரத்தம் அடக்குமுறையாலும், காங்கிரஸ் நண்பர்கள் விளக்கமறியாது வீசும் கல்லடியாலும் ஒழுகும் இரத்தம், நாளை உண்மையை உணர்ந்து, 'நம்ம சர்க்கார்' நமது பாசத்தை முதலாக வைத்துச் சிலர் இலாபச்சூதாட்டம் நடத்திய முறையாகவே முடிந்தது, நமது இன்பக் கனவு பலிக்காது போயிற்று, என்று மனம் நொந்து, அதே நண்பர்கள் சொரியப்போகும் கண்ணீருக்கு, முன் நீர் என்றே கருதுகிறோம். நாம் இரத்தம் சொரிவோம், இன்று. நமது காங்கிரஸ் நண்பர்கள் நாளை கண்ணீர் சொரிவர். சொல்லலங்காரத்துக்கு அல்ல, இதைத் தீட்டுவது.

“சுயராஜ்யம் என்ருல், மக்களுக்கு ஏதேனும் நன்மை பயப்பதாக இருக்கவேண்டும். சர்க்கார் என்ன செய்தது என்பதுபற்றிக் கூர்ந்து கவனித்து, மக்கள், இன்றில்லாவிட்டாலும், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, கணக்குக்கேட்கத்தான் போகிருர்கள்” என்று அமைச்சர் கோபாலரெட்டியாரே கூறுகிருர்.

ஆம்! கேட்கத்தான் போகிருர்கள் —இன்று 'நம்ம சர்க்கார்' என்றுபரிவுடன் பேசி, அந்தப்பரிவுக்குச்சான்றுகள் என்று எண்ணிக்கொண்டு, எதிர்க்கட்சிக்காரரின் மாநாட்டுப் பந்தலைக்கொளுத்தியும், கண்ணைத் தோண்டியும், கைகால்களை ஒடித்தும் மண்டையைப் பிளந்தும், மட்டற்ற கொடுமைகளையும் நடாத்தி வரும் காங்கிரஸ் நண்பர்களே, கேட்கத்தான்போகிருர்கள். அந்தநாள்தான், இந்த நாட்டு, நல்லாட்சிக்கு விடிவெள்ளி! அதுதோன்றும்என்பதிலே, நமக்குத் தளராத நம்பிக்கை இருக்கும் காரணத்தால்தான், 'நம்மசர்க்கார்' என்ற பாசத்துக்குப் பலியாகி, பாசீசத்தை உற்பத்தி செய்துவிட வேண்டாம், நம்ம சர்க்காரின் அமைப்பு முறை, இலட்சணம், அதற்குள்ள திட்டம், திறமை, திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள வழிவகை, நம்ம சர்க்கார் என்று, டில்லியில் ஒன்று இருந்துகொண்டுள்ள முறை, அதற்கும் சென்னை சர்க்காருக்கும் உள்ள தொடர்பு, அதனுல் வரும் விளைவுகள், ஆகியவை பற்றிச்சற்றே சிந்தனையைச் செலுத்துங்கள், என்று காங்கிரசிலுள்ள உண்மை உழைப்பாளர்களை, நேர்மையாளர்களை, நல்லாட்சி கோருபவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். வாழ்க ஜனநாயகம்! வருக நல்லாட்சி!!

## அதுவும் போகுதோ!

ரயில்வேக்களிலே வேலை பார்ப்பவர்களுக்கு, உணவுப் பொருள் வகைகளைப் போருக்கு முன்பிருந்த விலைக்கே தந்து வருவதன் மூலம், அகவிலையால் ஏற்படும் அவதியிலிருந்து பல இலட்சம் பேர்கள், மீட்கப் பட்டுள்ளனர். ரயில்வேக்களின் சார்பிலே, உணவுப் பொருள்கள், இப்போதுள்ள விலைக்கு வாங்கப்பட்டு, போருக்கு முன்பு இருந்த விலைக்கு, தொழில் புரிவோருக்குத் தரப்படுகிறது. இந்த உதவித்திட்டத்திற்காக, இந்திய சர்க்கார் வருஷத்துக்கு 25 கோடி ரூபாய் செலவிட வேண்டி நேரிடுகிறது. 200 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய நிலையிலே பட்ஜட் இருப்பதால், இந்த உதவித் திட்டத்தை ரத்து செய்து, அதன் மூலம் 25 கோடி ரூபாயை மிச்சப்படுத்தலாம், என்ற யோசனையை, பொருளாதார நிபுணர்கள் சிலர், சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனராம்.

## தூண்கள்!

“வட இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் நடைபெற்று வருகையில், தென் இந்தியாவிலே ஆங்கில அரசாங்கத்தின் தூண்களாக இருந்த இரண்டு இந்து திவான்களையும் இங்கே குறிப்பிடலாம். முதலாவது, ராஜா சர். டி. மாதவராவ்; திருவாங்கூரிலும் பரோடாவிலும் திவானாக இருந்து இரண்டு சமஸ்தானங்களை விசேஷ முன்னேற்றமடையச்செய்தவர். வேறொருவர் திவான் ரங்காச்சார்லு; மைசூரில் திவானாக இருந்து புகழ் பெற்றவர்.”

[ஆனந்தவிகடன்; 3-10-48.]

## ஜின்னுவின் கொடையும், பெருந்தன்மையும்

காலஞ்சென்ற ஜின்னு அவர்களின் மொத்தச் சொத்தின் மதிப்பு ரூ 40 லட்சம் என்று கணக்கிடப்படுகிறது. அதில், தாம் கல்விபயின்ற பம்பாய் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 50 ஆயிரமும், பம்பாயிலுள்ள ஆங்கிலோ-அராபிக் கல்லூரிக்கு ரூ 25 ஆயிரமும், அஞ்சுமான்-இ-இஸ்லாமிற்கு ரூ. 25 ஆயிரமும் கொடுக்க வேண்டுமெனத்தமது 'வில்'லில் எழுதியிருக்கிருர். மேலும் அதன்படி, தமது குடும்பத்தினருக்கு ஒதுக்கினது போக மீதமுள்ள சுமார் ரூ. 20 லட்சத்தில், இந்தியாவிலுள்ள அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம், பெஷவாரிலுள்ள இஸ்லாமிக் கல்லூரி, ஜின்னு சிறுவயதில் கல்வி கற்ற கராச்சி முஸ்லீம் கல்லூரி ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் சமத்துவமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தம் வாழ்நாளில், கட்சி வளர்ச்சிக்காகப் பொது மக்களிடமிருந்து பல காரியத்திற்காக நன்கொடையாகப் பெற்ற ரூ 84 லட்சத்தையும் முஸ்லீம் லீக் கட்சியினிடமும், அதற்குத் தொடர்புள்ள மற்ற ஸ்தாபனங்களுக்கும் சேர்ப்பித்து விட வேண்டுமெனக் குறித்துள்ளார்.

## சிறுவனைக் காணோம்

என் மகன் மண்ணுமுத்து, வயது 7, உயரம் சுமார் $3\frac{1}{2}$ அடி, நிறம் சிவப்பு, கிராப்புத் தலை, மார்பில் கட்டித்தழும்பு வடுவுஉண்டு. வீட்டிலிருந்துகடைவீதிக்கு போனவன் சுமார் 21 நாட்களாகத் தென்படவில்லை. பையனை யாராவது கண்டால் கீழ்க்கண்டமுகவரிக்குத்தெரியப்படுத்தும்படி கோருகிறேன்,

முருகேச முதலியார்

27, வளத்தீஸ்வரன் கோயில் தெரு,

காஞ்சீபுரம்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

“திராவிடநாடு” ஏஜண்டுத் தோழர்களில் பலர் பாக்கியை அனுப்பாமல் இருக்கிருர்கள். பாக்கியைத் திருக்கும் தோழர்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகை அடுத்த வாரமுதல் நிறுத்தப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு, பாக்கி முழுவதும் அனுப்பினுலன்றி எந்தக்காரணத்தைக் கொண்டும் இனிப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்

## காஷ்மீரில் புதிய போர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ளர்களை விரட்டியாக வேண்டும் என்று வீராவேசமாகப் போரிடுவது இயற்கை என்றபோதிலும், அதே போது, அவர்கள் தங்கள் வீரமும் தியாகமும் யாருக்குப் பயன்படுகிறது, எத்தகைய ஆட்சியை நிலைநிறுத்த வழி செய்கிறது, என்பதை எண்ணும்போது அவர்களுக்கு விசாரமும் பயமும் இயற்கையாக ஏற்படுகிறது. மலைஜாதியினரை விரட்டியான பிறகு, மகாராஜா பழையபடி தர்பார் செலுத்துவாரே, என்று பயப்படுகிறார்கள். இந்தக் கவலையும் கிலியும் போர்க்களத்திலேயும் நாட்டிலேயும் ஏற்படாமலிருக்க முடியாது. பதினேழாண்டுகளாக உரிமைப் போர் நடாத்திய மக்கள், ஏன் இனியும் இந்த மகாராஜாவை இருக்க அனுமதிக்கவேண்டும், என்று ஏக்கத்துடன் எண்ணாமலிருக்க முடியாது.

மகாராஜாவின் பவனிகள்—விருந்துகள்—அவரும் நேருவும் கலந்து பேசுவது—அவர் டில்லி விஜயம்,—என்ற செய்திகளைப்படிக்கும்போது, காஷ்மீர் மக்களுக்கு, அவரால் வெஞ்சிறையில் தள்ளப்பட்ட வீரர்களுக்கு, அல்லற்பட்ட அப்துல்லாக்களுக்கு, மனவேதனை ஏற்படாமலிருக்க முடியுமா? மகாராஜாவாம் மகாராஜா! மலைஜாதியினர் பாய்ந்து வந்ததும், தலைநகரைவிட்டு, தலை தப்பினால் போதும் என்று ஓடிய இந்தத் தர்பார் சுந்தரனை, ஏன் இன்னமும் தாங்கிக் கொண்டிருக்கவேண்டும். நாட்டுக்கு ஆபத்து வந்தபோது, ஓட்டம் பிடித்த இந்தலப்யார புருஷனை, நாம்ஏன் இன்னமும் காப்பாற்றுவது! நாட்டைக்காப்பாற்ற வேண்டும்—அது நமது கடமை—ஆனால நாட்டு மக்களை கேட்டினில் ஆழ்த்திய இந்த மன்னனைக் காப்பாற்ற வேண்டியதும் நமது கடமையா? இதற்கு நமது இரத்தத்தை ஏன் சிந்த வேண்டும், என்று மக்கள் எண்ணாதிருக்க முடியுமா!

* * *

காஷ்மீர் மக்களின் மனம் மட்டுமல்ல, அவர்களுடைய தலைவருக்கும் இதே கருத்து இருக்காமலிருக்க முடியாது. "மகாராஜாவுக்கு டில்லி வட்டாரத்தில் கிடைத்துவரும்செல்வாக்கைக் கண்டு மக்கள் மனம் புழுங்குகிறார்கள்" என்று ஷேக் அப்துல்லாவே கூற நேரிட்டிருக்கிறது.

"மகாராஜாவின் போக்கு எனக்குத்திருப்திதருவதல்ல. ஸ்ரீநகருக்கு ஆபத்து என்ற உடனே இந்த மகாராஜா ஓடிவிட்டார். இந்த மகாராஜாவின்எதேச்சாதிகாரத்தை எதிர்த்தே இந்த பதினேழாண்டுகளாகக் காஷ்மீர மக்கள் போராடி வந்துள்ளனர். மகாராஜாவோ, மறுபடியும் பலம் பெற்று வருகிறார், இந்தியாவிலே அவருடைய நண்பர்கள் பலர் அவருக்கு உதவி செய்கிறார்கள்" என்று, ஷேக் அப்துல்லா சென்றகிழமை டில்லியில் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் கூறினார்.

காஷ்மீர் சமஸ்தானாதிபதி சம்பந்தமாக மட்டுமல்ல, பொதுவாகவே, சமஸ்தானாதிபதிகள் விஷயமாக இந்திய சர்க்கார் கொண்டுள்ள போக்கு ஷேக் அப்துல்லாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

"சுதேசசமஸ்தானாதிபதிகளுக்கு அவர்களின் சொந்தச் செலவுக்காகக்கொள்ளைப் பணத்தைத்தர, இந்திய சர்க்காரின் சமஸ்தான இலாகா முன்வந்ததுகண்டு, சமஸ்தான மக்கள் அதிர்ப்திகொண்டுள்ளனர்" என்றும் அவர் நிருபரிடம்கூறியிருக்கிறார்.

"மன்னவர்களின் சார்பிலேநின்று பணியாற்றுவதை ஏதோ ஓர் புனிதமான மதக்கடமை என்று அந்த இலாகாவில் உள்ள அதிகாரிகள் எண்ணுகிறார்கள்" என்று கேலிசெய்கிறார். "இந்தவிஷயத்திலே, வகுப்புவாதமே கிடையாது! இந்து மன்னரானாலும் சரி, முஸ்லிம் மன்னரானாலும் சரி, மன்னர் என்றால் அவரை ஆதரிப்பது என்ற அளவிலே சமஸ்தான இலாகா வேலை செய்கிறது" என்றும் ஷேக் அப்துல்லா, வேதனையைவேடிக்கைகலந்த மொழியிலே தெரிவிக்கிறார். இந்த வேதனையுடன், மற்றோர் வேதனையும் ஷேக் அப்துல்லாவைத் தாக்குகிறது.

* * *

"படைகளை அனுப்பி, நான், மலைஜாதியினரை ஒடுக்கி, காஷ்மீரைக் காப்பாற்ற முடியும்—செய்கிறேன். ஆனால் அப்துல்லா! காஷ்மீர் மக்களின் ஆதரவைத் திரட்டி மக்களின் அணிவகுப்பை அமைக்க வேண்டியது உன்பொறுப்பு." என்று பண்டிதநேரு, ஷேக் அப்துல்லாவிடம் கூறினார். புதிய கொந்தளிப்பு ஏற்பட்டதும், காஷ்மீர்நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட அப்துல்லா, இந்த அரிய யோசனையையும் ஏற்றுக்கொண்டு, ஆவனசெய்ய முனைந்தார். அதன்பலன் என்ன? வீண்பழிசுமத்தப்படுகிறது அவர்மீது. மனம் நொந்து இதனை அவர், சென்ற கிழமை கூறினார்.

"மக்களின் மனதுக்கு மகிழ்ச்சியூட்டி, புதியநம்பிக்கை ஏற்படச் செய்வதற்காக, நான், பலகாலமாகக் கூறிவந்த சில சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டேன். இதிலே முக்கியமானது, காஷ்மீரில் உள்ளஜாகிர்தாரிமுறையை ஒழிப்பது. இதன் பலனாக, ஏழை உழவர்களுக்கு நன்மையும் நியாயமும் கிடைக்கிறது. பண்ணையில் அடிமைகளாகிப், பதைபதைத்துவாழ்பவர்களுக்குக்,கொஞ்சம் சுகம் கிடைக்கும் திட்டம் இது. இதனைச் செய்த உடனே ஜாகீர்தார்கள் சீறினர். அந்தச் சீற்றத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. இந்தியாவிலே சிலர், இந்தத் திட்டத்தை வகுப்புவாதத் திட்டம் என்று கூறுகிறார்கள்—விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். நான் இந்துக்களைக் கெடுத்து முஸ்லிம்களுக்கு நன்மை தேடுகிறேன் என்றும் பழி சுமத்துகிறார்கள். ஏழைமக்களை ஜாகீர்தார்களின் பிடியிலிருந்து விடுவிக்கநான் முயன்றால், இப்படிப் பேசுகிறார்கள். இந்த அளவு நன்மையும் செய்யாவிட்டால் காஷ்மீர மக்களின் மனம் எப்படிக்களிக்கும்!"—என்று சோகத்துடன் பேசினார் ஷேக் அப்துல்லா.

ஜாகீர்தார்களில், பெரும்பாலனவர்கள் இந்துக்கள் — உழவர்கள், முஸ்லிம்கள், — ஷேக் அப்துல்லா, இந்து—முஸ்லிம் என்ற நோக்கம் கொண்டவரல்ல — ஆனால் சீமான்களிடம் சிக்கிச்சீரழிவுபடும் ஏழையைக்காப்பாற்ற, ஜாகீர் முறையை ஒழிக்கலானார். இதற்கு, இந்தப்பழி!

இந்திய சர்க்கார், ஷேக் அப்துல்லாவின், இந்த நடவடிக்கைகளை எதிர்ப்பதாகத் தெரிகிறது. இது போன்ற இதம் தரும் திட்டங்களை நிறைவேற்ற முடியாமற் போய்விட்டால் "நான் பதவியிலிருந்து பயன் இல்லை! காஷ்மீர் பிரதம மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்துவிடலாமா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று ஷேக்

அப்துல்லா பத்திரிகை நிருபர் மாநாட்டில் பேசியிருக்கிறார். இப்போதுள்ள நிலையில், காஷ்மீரில், உள்ள சீமான்களின் மனதைப் புண்படுத்தவேகூடாது, காஷ்மீரத்தில் ஒரு நூறு ஜாகீர்தார்கள் இருந்து கொண்டு, 'தர்பார்' செலுத்துகிறார்கள். என்ற போதிலும், இப்போது முறைகளை மாற்றி அவர்களைப் புண்படுத்தக் கூடாது, என்று அப்துல்லாவுக்கு இந்திய சர்க்கார் கூறுகின்றனராம். இவர்களின் மனம் புண்படக் கூடாது என்று இவ்வளவு அக்கரை காட்டுகிறதே இந்திய சர்க்கார், இவர்களின் பண்ணைகளிலே பாடுபடும் ஏழை அரிஜனங்கள் பல இலட்சம் பேர் உள்ளனரே, அவர்களிடம் அக்கரை காட்டவேண்டாமா?— என்று ஷேக் அப்துல்லா கேட்கிறார். பண்டித நேரு சொன்னபடி, மக்களின் ஆதரவைத் திரட்டவேண்டுமானால், பொருளாதார சம்பந்தமாக, ஏழையை வாழவைக்கும் சமதர்மத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் — இதற்கு இந்திய சர்க்கார் குறுக்கிடக் கூடாது, என்று ஷேக் அப்துல்லா கூறுகிறார்.

டில்லியில், காஷ்மீர் மகாராஜாவுக்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கு, இப்போது ஷேக் அப்துல்லாவையே வேதனையிலாழ்த்தக் கூடியதாகிவிட்டது. பட்டேலின்பிடியிலுள்ளசமஸ்தான இலாக்கா, மக்களின் உரிமைகள், நலன்களைவிட, மகாராஜாக்களின் சுகபோகத்தைக் காப்பதிலேயே, அதிக அக்கரை செலுத்துகிறது. எனவே, ஷேக் அப்துல்லாவைப் போல, சமதர்ம நோக்குடையவர்களின் போக்கை, எதிர்க்கிறது. இப்போதுள்ள நிலைமை முற்றுமானால், ஷேக் அப்துல்லா, பதவியை இராஜிநாமா செய்யவேண்டியும் நேரிடக்கூடுமென்று தெரிகிறது. மகாராஜா நீக்கப்பட வேண்டும்— அதிகாரம் மிக மிகக் குறைக்கப்பட வேண்டும்—சீமான்களின் ஆதிக்கம் ஒழியவேண்டும்—சமதர்ம திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் — என்பவை ஷேக் அப்துல்லாவின் திட்டங்கள்.

இவைகளைக் கடந்த 17 ஆண்டுகளாகக் கூறியே அவர் காஷ்மீர் மக்களின் தலைவரானார்-அவர்களின் நம்பிக்கையானார்.

இன்று, பட்டேல்தர்பாரிலே காஷ்மீர் மகாராஜாவுக்கும் அவருடைய அலங்காரப் பொம்மைகளுக்கும் இடமும் செல்வாக்கும் கிடைத்திருக்கிறது, அப்துல்லா மீது சந்தேகமும் பழியும்சுமத்தப்பட்டுவருகிறது. அவருடைய மனக்குமுறல் ஓரளவுக்கு வெளிவந்திருக்கிறது. இதன் விளைவும், முடிவும், எவ்விதமிருக்குமோ! ஷேக் அப்துல்லா, ராஜிநாமா செய்துவிடக் கூடும் என்ற எண்ணம் வலுத்துவருகிறது.

●

## இரு காட்சிகள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கும் அளிப்பதின் மூலம் கொலைச் செயலைக் குறைக்கும் — பலரும் வாழும் பக்குவமுடையதாக நாட்டை மாற்றி அமைப்பதே, அதிகார பீடத்தில் அமர்ந்திருப்போரின் முதற் கடமையாகும். இந்த இரு காட்சிகளைக் கண்டும், ஆளுவோர் அசட்டையாக இருப்பார்களானால், நேரிய முறையைக் கடைப்பிடித்து, ஆளவந்தார்களை வேறு வேலையைக் கவனிக்க அனுமதிச் சீட்டுக் கொடுத்தனுப்புவது, பொதுமக்களுக்கு என்றும் உள்ள கடமையாகும். இதுவும் புரட்சிதான்; பொதுமக்கள் விழிப்புணர்ச்சியின்மீதும், வாக்குரிமையின்துணை கொண்டும், புதியதோர் சமுதாயத்தைப் புவிமீது ஏற்படுத்துவது இதனாலும் சாத்தியமாகும். வெல்க புரட்சி! வாழ்க சமுதாயம்!

### கண்கொள்ளாக்காட்சி.

சென்னைப் பிரதமர் ஓமந்தூர் இராமசாமியார் திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுரர் ஆலயத்திற்குச் சென்றிருந்தார். அது சமயம் மூல விக்ரகங்களுக்குத் தங்கக் கவசங்கள் சாத்தப்பெற்றுக் கண்கொள்ளாக் காட்சி அளித்தனவாம்!

### கருத்தளிக்கும் நிகழ்ச்சி!

வேதாரண்யம் பெரிய கோயிலில் வேதாரண்யேஸ்வரருக்கு அணிவிக்கப்பெறும் ஒன்பதரைச்சேர் நிறையுள்ள தங்கக் கவசம் களவு போய்விட்டது. ரூ.32000 மதிப்புடையது. போலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

### கூடி இருக்கின்றனர்!

இங்கிலாந்தில், காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்கள் கூடியுள்ளனர். புதிய அந்தஸ்துப் பெற்றுள்ள பாகிஸ்தான்—இந்திய யூனியன் பிரதமர்களும் கலந்துகொண்டுள்ளனர். எதிர்காலத்தில் எவ்வாறு ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வது என்பதைத் தீர்மானிக்க, அதற்கான திட்டம் தீட்டக் கூடி இருக்கின்றனர்.

### இவர்களும்.........!

காசியைச் சேர்ந்த மடாதிபதியான கரபாத்ர சுவாமி மகாராஜ் விமான மூலம் சென்னை வந்து சேர்ந்துள்ளார். இவரைப் பூரிசங்கராச்சாரியும் மற்றும் பக்தகோடிகளும் வரவேற்றனர். காமகோடி பீடம் சங்கராச்சாரியாரை, இவர் சந்தித்துப் பேசுவார்! எதற்கோ?

### மதம் கலவாத அரசு!

செங்கோட்டையில் 5, 6 வது ராயல் கூர்க்க துப்பாக்கிப் படையினர் பூஜை பண்டிகை கொண்டாடினர். துர்க்கை விக்ரகத்தின் முன் நடனம் நடைபெற்றது. கவர்னர் ஜெனராலும் கலந்துகொண்டார்!

### மற்றோர் காட்சி

மராமத்து மந்திரி காட்கில் மாளிகையில் விஜயதசமி கொண்டாடப் பெற்றது. துர்க்கை சிலைக்கும், மற்ற ஆயுதங்களுக்கும் பூஜை செய்யப்பட்டது. இந்தியயூனியன் துணைப் பிரதமர் பட்டேல்ஜியும் கலந்து கொண்டார்!

### யார் பின்பற்றுவது?

“ஆனால் பிரிட்டனில் சிலருக்கு இது (ஐதராபாத்தில் எடுத்துக் கொண்ட போலீஸ் நடவடிக்கை) பிடிக்கவில்லை. நூற்றுக்கணக்கான எலிகளை விழுங்கிய பூனை தீர்த்த யாத்திரை புறப்பட்ட கதை போல் இவர்கள் இந்தியாவிற்கு உபதேசம் செய்ய வந்துவிட்டார்கள். அவர்கள் உண்மையிலேயே சமாதானத்தை விரும்பினால் மகாத்மா காந்தியின் உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும்.”

“காந்திஜியின் லட்சியங்களை உலகம் பின்பற்றுமானால், பிறகு இராட்டை மூலமாகவே பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம். ஆனால் உலகம் அப்படிச்செய்யவில்லை. குறைகள் நிறைந்த உலகமிது. உலகின் இதர பகுதிகளுக்கு ஏற்றுப்போல் இந்தியா தன்னை சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.” பட்டேல்ஜி.

# நவராத்திரி

அல்லது

## ஒன்பது இரவு

—❀—

(புரட்டாசி மாதத்தில் தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் நவராத்திரிப் பண்டிகை குறித்துக் கைவல்யசாமி முன்பு எழுதிய இக்கட்டுரை, இப்போதுதமிழ் மக்களுக்கு நல்ல பயன் தரும் என்று கருதிவெளியிடுகிறோம்)

நவராத்திரி என்ற பதம் ஒன்பது இரவு எனப் பொருள்படும். இது புரட்டாசி அமாவாசைக்குப் பின் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள், இரவிலும்கொண்டாடப்படும் உற்சவம். இது சில வருஷங்களில் ஐப்பசி மாதத்துள்ளும் வரும். இந்நாட்களின் ஆரம்பத்தில் எல்லோர் வீட்டிலும் அவரவர்கள் நிலைக்கேற்பப்பொம்மைகள் கடவுளின் உருவமான படங்கள் வைத்து ஒவ்வொரு சாயங்காலமும், ஒன்பதுநாள் வரையிலும் பாட்டு முதலியவைகளைப் பாடி இந்த உற்சவத்தைப் பெண்கள் கொண்டாடுவது வழக்கம்.

### கொண்டாடும் விதம்

நவராத்திரியில் கடைசி நாளாகிய நவமி தினத்தில் புருஷர்கள் தமது வீட்டிலிருக்கும் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கிவைத்துக் காலை முதல் உபவாசமிருந்துசரஸ்வதியைப்பூசை செய்யவேண்டும். இந்த நவமியன்றையத் தினமாவது அல்லது அடுத்த தினமாவது தொழிலாளிகள், ஆயுதத்தையுடையவர்கள் ஆகியவர்கள் தங்கள் தங்கள்ஆயுதங்களைவைத்துப் பூஜை செய்வது வழக்கம். அதனாலேயே இந்தப் பூசைக்கு ஆயுத பூசை என்றொரு பெயரும் உண்டு.

### சைவஸ்மார்த்த புராணக்கதை

முன்னொரு காலத்தில் மகிஷாசூரன் என்ற எருமைரூபமான அசுரனும் அவன் பரிவாரங்களும், விருத்தியாகிக், கடவுள் வரத்தால் சிறந்த பதவியை அடைந்து உலகை இம்சித்துக்கொண்டிருந்தால்இந்தக் கஷ்டம் பொறுக்கமுடியாமல் தேவர்கள் பார்வதியிடம் முறையிட, பார்வதி ஒன்பதுநாள் சிவபிரானைக் குறித்துத் தவமிருந்து அவரிடம் தகுந்த சக்திபெற்று ஒன்பதாம்நாள் மகிஷாசூரனைக் கொன்று அவன் பரிவாரங்களை நாசம்செய்து சாந்தமடைந்தார். மகிஷாசூரனைக் கொன்றதினால் பார்வதிதேவிக்கு, மகிஷாசூர மர்த்தனி என்கிற பெயரும் வந்தது. எனவே இந்தக் கதையின் ஆதாரத்தைக் கொண்டு, அம்மன் தவமிருந்து விழித்த ஒன்பதாம்நாள் வேண்டிய வரங்கள் கொடுப்பார் என்னும் கருத்தைக் கொண்டே இவர்கள் இந்த உற்சவத்தைக் கொண்டாடுகிறார்கள்.

உட்கருத்து என்னவென்றால், மகிஷாசூரன் அவன் பரிவாரங்கள் முதலியவைகள் என்பதை அஞ்ஞானமாகவும், அதன் காரியங்களுமாகவும், பார்வதியை சித்சக்தியாகவும், அது பரம்பொருளாகிய ஆத்ம சாக்ஷாத்கார விசேடத்தால் அஞ்ஞானத்தை வேரறுப்பதாகவும் கொள்ளவேண்டுமாம் ‘துர்க்காலக்ஷ்மி சரஸ்வதியே நம” என்னும் மந்திரத்தைப் பார்ப்பானிடமிருந்து அம்மனையே பிரதானமாகப் பூசிக்கும் சங்கரமடத்துசாஸ்திரிகள்வரையிலும், மக்களிடமிருந்து கிடைக்கும் வரையிலும் தங்கள் லௌகிக சுகத்திற்காக அவர்களை வேரறுக்கிறார்களே ஒழிய, அவர்களது அஞ்ஞானத்தை வேரறுப்பதாகத் தத்துவார்த்தம் சொல்லும் சமயவாதிகளெல்லாம் மகிஷாசூரனிடமல்லவா (அதாவது ஆசையில்) மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

### வைஷ்ணவ மாத்வர்கள் புராணக் கதை.

முன்னொரு காலத்தில் லக்ஷ்மி தேவி உலகில் அலமேலுமங்கையாக வந்து பரமபத வாசியாகிய விஷ்ணுவான திருப்பதிப் பெருமாளை யடைந்து ஆனந்திக்க இந்த ஒன்பது நாள் தவமிருந்தாராம். இதன் முடிவில் அவர் எண்ணம் முற்றுப்பெற விவாகம் பெரிய ஆடம்பரமாக முடிந்ததாம். இந்த விசேடத்தை முன்னிட்டுத்தான் வைணவ மாத்வர்கள் இந்நாளைச்சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்நாட்களில் திருப்பதியில் பிரம்மோற்சவம் நடக்கிறது. பிர்மாவின் பத்தினியான சரஸ்வதியும் இந்த நவராத்திரியில் தன் நாயகனை அடைந்து நிலைபெறத் தவமிருந்தாள் என்னும் கதையைக்கொண்டு கடைசி மூன்று நாளும் சரஸ்வதிக்கு முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது. பத்தாம் நாள் விஜயதசமியன்று சரஸ்வதி தவம் முடிந்து சந்துஷ்டியாயிருப்பதால் அன்று வாசிப்போருக்குக் கல்வி நன்றாக வருமாம். தொழில் செய்வோர்கட்குக் காரியங்கள் கைகூடிவருமாம்.

இதை நம்பி நடக்கும் நம்மைவிட, மற்றத்தேசங்களிலெல்லாம்சரஸ்வதி எந்நாளும் திருப்தியோடு கூடின சந்தோஷத்துடன் இருக்கிறாள். நம் தேசத்தில் வருஷத்திற்கு ஒரு நாள் தான் கண்ணைத்திறந்து திருப்திப்படுகிறாள். இதற்குக் காரணம் பார்ப்பானுக்குக் கொடுப்பது சரியாக கொடுக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்காகவோ, அல்லது பூசையின் திருப்தி குறைவாகவோ, அல்லது நம்மிடம் ஆயிரமாயிரம் வருஷமாக வாங்கியுண்ட நன்றி கெட்ட குணத்தை மறைப்பதற்காகவோ, அல்லது தன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தைத் தன் மூதப் பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளுக்கு எங்கே சொல்லி வைத்துவிடுவார்களோ என்னும் அஞ்ஞானத்தாலோ என்பதை நாம் அறியோம்.

நாம் சரஸ்வதிக்கு செய்த தொண்டு சாமானியமல்லவே. ஒரு ஏட்டைக் கிழிக்கோம், ஒருஎழுத்தை மிதியோம், இறைந்து கிடக்கும் இதழில் துப்போம், படித்த ஒரு பழைய ஏட்டையும் வீசியெறியோம், கால் பட்டால் தொட்டுக் கும்பிடுவோம், கைபட்டால் கண்ணில் ஒத்திக்கொள்வோம், எந்த ஏட்டுக்கும் காப்புச் சொல்வோம். செல்லரித்த ஏட்டையும் புண்ணிய தீர்த்தத்தில் கொண்டுபோய்ப் போடுவோமே ஒழியத் தெருவில் போடோம். கற்றவர் நாவின் கருத்தும் கம்பன் கவித்திறமும் அவளே என்போம். இத்தனையும் போதாமல் வருஷம் ஒருதரம் பத்துநாள் பல்லக்கிலமர்த்தி வைத்துப் படைத்துக் கும்பிடவும் செய்கிறோம். இத்தனையும் [illegible] இங்கு செய்ய இந்தக் [illegible] கொஞ்சமும் நன்றி [illegible] [illegible] மேலுட்டும் [illegible]

காரணமென்ன வென்பதை நேயர்கள் சரஸ்வதியையே கேட்கட்டும். "ஏ சரஸ்வதி! மேனாட்டில் உனக்கு என்ன மரியாதை இருக்கிறது? உன்னைப்படித்து எறிகிறார்கள், காலில் மிதிக்கிறார்கள், செருப்புக் கட்டுகிறார்கள், மலம் துடைக்கிறார்கள், உன்பேர் சொல்லுவதில்லை, நீ ஒருத்தி இருக்கின்றாய் என்றுகூட நினைப்பதில்லை. உனக்கு பூசையில்லை. புருஷனில்லை, வீணையில்லை, எல்லா வித்தைக்கும் அவர்கள் தாங்களே எஜமானர்கள் என்கிறார்கள்—எனவே நீ செய்வது நியாயமாகுமா என்று நாங்கள் சொல்லிவிட்டால் உன் பாஷையான சமஸ்கிருத இலக்கணத்தை எங்களுக்குச் சொல்லிகொடுக்கப் படாதென்று நீ சொன்னதாகச் சொல்லும் சாஸ்திரிகளே எங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லுகிறார்கள். உன் முதற்பிள்ளைகளான பார்ப்பனர்களின் தாசிப்பிள்ளை-அடிமை-வேலையாள்—ஒழுக்கமற்றவன்— என்று எங்களில் படித்த உணர்ச்சியற்ற பண்டிதர்களையும் கூட நீ சொல்லியிருப்பதாக உன் முதற் பிள்ளைகள் சொல்லும் ஏட்டைக்கூடக் கிழித்தெறியாமல், சற்றுப் விஸ்வாசமற்றுப் போனாயே என்று நாங்கள் சொல்லிவிட்டால் தூஷித்தவர்களாகி விடுவோமா? நீயே சொல்லு!"

"நீ வாசம் செய்யும் மேனாட்டில் உனக்கு பூசையில்லை, நைவேத்யமில்லை. பூசாரி குருக்களுக்குக் காணிக்கையுமில்லை. பஞ்சமும் படியாமையு முடைய இந்த நாட்டின் பேரில் மாத்திரம் உனக்கு வந்த வயிற்றெரிச்சல் என்ன? உன் பிள்ளைகளுக்கெல்லாம் உன் பேராலேயே அளித்தளித்து ஆண்டியானோமே என்று நாங்கள் சொல்லுவதாலேயே உன் பக்தர்கள் உன் புருஷனுடைய பிர்மலோகத்திற்கும் உன் மாமனுடைய வைகுண்டத்திற்கும் போகும் கதவுகளை நாங்கள் (சமய தூஷணையால்) சாற்றினவர்களாகி விடுகிறோமாம். நீயும் உன்குடும்பத்துப் பெண்களும் குடிபோயிருக்கும் நாட்டில் உங்கள் புருஷர்களுக்குக் கோயில் கிடையாது—கும்பாபிஷேகம் இல்லை, அப்படியிருக்க, நீங்கள் இல்லாத நாட்டில் உங்களுக்குக் கோயிலும் கும்பாபிஷேகமும் பூசையும்எதற்கு? இருக்கிற கோவில்களில் நீங்கள் குடியிருந்தால் போதாதா? காணிக்கையையும் நிறுத்திக், கும்பாபிஷேகத்தையும் விட்டுக் கோவிலுக்கெழுதி வைப்பதையும் நிறுத்தி பணத்தையெல்லாம் படிப்பிற்கே வைத்துவிட்டுப் போங்களென்றால், பாமரர்களுக்காக ஏற்பாடு செய்து வைத்த சமய ஒழுக்கங்களை எல்லாம் தடுத்து மோட்ச வாசலை அடைக்கும் தாசர்களென்று எங்களை ராஜீயவாதிகள் கூடச்சொல்லலாமா? ஆசாரிகளுக்கும் குருக்களுக்கும் கொடுப்பதை நிறுத்திவிட்டு பக்கத்து ஏழைக்குப் படிப்பும் தொழிலும் கற்பியுங்களென்றால் ஆச்சாரிகளையும் பெரியவர்களையும் நாங்கள் குற்றம் சொல்லுகிறவர்களாகி விடுவோமா? அறுப்பறுக்கும் காலத்தில் கருக்கரிவாள் கூட ஒரு மூலையில் கவலையற்றுத் தூங்குகிறதே. வருண பகவானுக்கும் சூரிய பகவானுக்கும் ஏற்பட்ட சண்டையால் வருணபகவான் முறியடிக்கப்பட்டு ஓடி மறைந்துவிட்டானே. சூரியனே இப்போது கழனியில் உள்ள எல்லாவற்றையும் காய்ந்து தொலைத்து விட்டானே, உன் ஆயுதங்களுக்கு காட்டிலும் கழனியிலும் கூட வேலை இல்லையென்றால் பின்னர், கருமார் வீட்டிலும் வேலை என்ன? எனவே வேலையில்லா ஆயுதத்திற்கு பூசை ஏன்?"

இதுவரையிலும் பார்வதி, சரஸ்வதி லக்ஷ்மிக்குச் செய்த பூஜை எல்லாம் என்னவாயிற்று? எங்கே போய்ச் சேர்ந்தது? நம்மிடை அவர்களிருந்தால் அந்தப் பூசைகளை ஏற்றுக் கொண்டிருப்பார்களே. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அதனால் நாம் பலனும் கொண்டிருப்போம். சங்கராச்சாரிக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் சாரதா தேவிக்கும் போட்ட படையலெல்லாம் தேவர்கள் உண்டது உண்மையானால் நமக்குப் பிரதி பலன் ஒன்றும் காணோமே. பிரத்தியட்சத்தில் நன்றி கெட்ட தேவர்களுக்கு இனிப்போடும் படையலால் நமக்கு என்ன நன்மை வரும்? ஏட்டில்தான் பலன் நீட்டி நீட்டி எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய யுக்திக்கும் அனுபவத்திற்கும் அநேக காலமாக ஒத்து வருவதில்லையே. யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராத சாஸ்திரங்களைத் தள்ளிவிடவேண்டுமென்றல்லவா மனிதனுடைய சிந்தனா சக்தியும் அதைத் தெரிந்த பெரியவர்களும் சொல்லுகிறார்கள். பார்வதிக்குப் பரிந்து வரும் சைவர்களும் சரஸ்வதிக்குச் சலுகை காட்டும் சுமார்த்தர்களும்சற்றுக் கவனித்துப் பார்த்த பின் சண்டைக்கு வாருங்கள். சரஸ்வதி பார்வதி இவர்கள் உண்டா? இல்லையா? என்பதல்ல இங்குவாதம். அவர்களைத்தூஷிப்பதுமல்ல. "சரஸ்வதி என்றால் அறிவும் லக்ஷ்மி என்றால் உலகத்தின் சாமக்கிரிகைகளும், தூர்க்கையென்றால் உலகத்தின் நாசமும் ஆகும்" என்பதான அர்த்தங்களையும் நாங்களுமறிவோம். அநேக ஆயிர வருஷங்களாக அவர்கள் பேரைக்காட்டி நாம் செய்து வரும் கிரிகை, சடங்கு, பூசை, பிராமணபோஜனம், தக்ஷிணை தானம் இவைகளின் பலனென்ன? அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு நமக்குச் செய்த நன்மை என்ன? அவர்கள் அதைஏற்றிருந்தால் வெள்ளைக்காரர்களின் உதவியால் நம்நாட்டில் அவர்கள் குடியிருக்கக் காரணமென்ன? ஏற்றுக்கொள்ளாமலிருந்தால் அதைத் திருத்தி அமைக்க வேண்டாமா? என்பதே இங்குள்ள வாதம்.

சரஸ்வதிமாலும், லக்ஷ்மி விலாசமும், பார்வதி மண்டபமும் கட்டி வைத்த தஞ்சாவூர் மகாராஜா குடும்பம் எங்கே? தப்பித் தவறி சிந்தின அந்த வம்சத்திற்கு ஒரு டிப்டி சூப்ரின்டெண்டு வேலைக்குக் கூட எவ்வளவு கஷ்டமாகவிருக்கிறது? காரணமென்ன? வீண்பூசைகளும் கோவில் கும்பாபிஷேகமுமல்லவா! அவர்கள் செய்த பிராமண போஜனமும் தக்ஷிணையும் கோயில் பூசையும் என்ன பலனை அளித்தது? சரஸ்வதி பூசையின் கொலுவால் அல்லவா நாயுடுகளின் அரசாட்சி தஞ்சாவூரில் ஒழிந்தது? கிளைவும்டூப்ளேயும் எந்தச்சரஸ்வதியைப் பூசித்தார்கள்? அவரவர்கள் முயற்சியும் கடமையும் எந்தக் கஷ்டத்திலும் செய்து முடிக்கும் தைரியமும் இருந்தால்எல்லா லக்ஷ்மியும் அங்கே வந்து தீர்வார்கள். இதுவே உலக அனுபோகமும் சாஸ்திரத்தின் கருத்துமாகும்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.